# காதலியாற்றுப்படை

பேராசிரியர்
க. கணபதிப்பிள்ளை

அமரர் திரு. முருகேசு வேலுப்பிள்ளை (மு.வே.) அவர்களின்
நினைவு வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் உயர்திரு

# முருகேசு வேலுப்பிள்ளை

(மு.வே) அவர்களின்
(இளைப்பாறிய அதிபர்)



தோற்றம்
08.06.1925

மறைவு
15.09.2005

**திதி இது**

ஆண்டு பார்த்திப அதனில் ஆனதொரு ஆவணியில்
பூண்டுவரு பூர்வபக்க துவாதசியில் – நீண்டபுகழ்
தேடியடைந்த திருவார் வேலுப்பிள்ளை
நாடினான் ஈசன் கழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்


**திரு. முருகேசு வேலுப்பிள்ளை (மு.வே)**

அவர்களின் நினைவாக

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின்

# காதலியாற்றுப்படை

## சமர்ப்பணம்



'பூம்புகார்'
கரவெட்டி கிழக்கு
கரவெட்டி.

இல. 245/1, பம்பலப்பிட்டி
கொழும்பு - 04.

**16. 10. 2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியம் பாடுவேன் நான்

நாற்ப தாண்டு களுக்கு மேலாக நான்
உங்கள்,
நன்மை தீமை அனைத்திலும் ஒன்றியே
வாழ்ந்து வந்தவன்.........
என் வசந்த காலத்தை
வவுனியாவிலே........
உங்கள் வாழ்வினோடு கரைத்தவன்,
சொந்தம், பந்தம், உறவுடன்
நண்பர்கள்
வாத்தியாரின் 'ஆள்இவன்' என்றதோர்
'வசையும், வாழ்த்தும்' ஒன்றாகவே தந்தனர்
நேற்றுப் போல இருக்குதென்
நெஞ்சிலே........
நீங்கள் செய்த நற்பணி யாவுமே
தோற்றுப் போகவில்லை உன்நலறம்
தொண்டு செய்பவர் வீழ்வதும் இல்லையே
நாற்று நட்டு வளர்த்த உன்புண்ணியம்
நாடுகள் பல, பற்பல வற்றிலும்
வீற்றிருந்து வளர்ந்து செழிப்பதை
விருப்பினோடு கண்டு மகிழ்ந்தனை,
வாத்தியாரின் வாழ்வியலை ஒரு
வளம்மிகுந்ததோர் காவிய மாக்கலாம்
அதில் வரும்,
'பாத்திரம்' ஒன்றாக நான் ஆகலாம்.
வாய்ப்புக் கிட்டிடும் போதுநான்
உங்களின்
வாழ்வையே ஒரு காவிய மாக்குவேன்
எண்பதாண்டுகளுக்கு மேலாகவே
'எரிந்த தீபம்' அணைந்தது.
எண்ணெய் விட்டமை மீண்டும் சுடர்விடச்
செய்யும் ஆற்றல் எம்கையில் இல்லையே..........

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனின் அரவணைப்பு
# அவருக்கு உண்டு

அமரர் உயர்திரு வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்களின் மறைவினைக் கேட்டு மிகுந்த துக்கம் அடைந்தோம். அமரர் அவர்கள் எங்கள் குடும்பத்தோடு இரண்டறக் கலந்து அன்பாகப் பழகியவர்.

எதையும் வெளிப்படையாகப் பேசும் சுபாவம் உடையவர். உள்ளத்தில் ஒன்றை மறைத்து வைத்து உதட்டினால் உபசாரம் சொல்லாத உயர்ந்த பண்பு அவரிடம் இருந்தது.

தமது மருமகளையும் தானே பெற்றமகள் போலவே கருதி அன்பு பாராட்டியவர்.

எல்லோருக்கும் உதவி செய்ய முன்நிற்பவர். தனது உடல்நலம், பொருள் என்பவற்றைப் பற்றிக் கவலைப்படாது மற்றவர்களுக்கு உதவி செய்வதிலே மகிழ்ச்சி கண்டவர்.

பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிலே கண்ணுங்கருத்துமாக இருந்து அவர்களை நல்ல முறையிலே உருவாக்கியவர்.

அன்னாரின் பிரிவினாலே துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள் யாவருக்கும் எவ்வாறு ஆறுதல் சொல்வது? அவர் கர்த்தருள் நித்திரையானார். ஆண்டவனின் அரவணைப்பு அவருக்கு நிச்சயம் உண்டு.

**பஸ்ரியாம்பிள்ளை குடும்பத்தினர்**
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகளும் நினைவுகளும்

**கரவெட்டி கிழக்கு, அமரர் முருகேசு வேலுப்பிள்ளை ஓய்வுபெற்ற அதிபர் அவர்களது நினைவாக உள்ளவை.**

"ஆய கலைகள்" அனுக்கிரகம் புரிகின்ற, கல்வி வளம் நிறைந்த, ஒழுக்கமும் பண்பும் பொருந்திய, ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டி வருகின்ற, வயல்வளமும் தோட்ட வளமும் பொலிந்து விளங்குகின்ற கரவெட்டி கிழக்கு என்னும் பதியின் கண்ணே கோயில் கொண்டெழுந்தருளி வீற்றிருந்து, அடியவர்களுக்குத் திருவருள் புரிந்து கொண்டே வருகின்ற பெருமான் யார்க்கரு விநாயகப் பெருமான் ஆவார்.

அமரர் முருகேசு அவர்கள் இந்த,

**"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்**
**சரண அற்புத மலரை"**

"அவனருளாலே", "தப்பாது சார்ந்து" வணங்கி வந்தவர். திருமணம் நிகழ்ந்த பின்பும், அமரர் முருகேசு சின்னாச்சி தம்பதிகளும் இவ்வாறே தொடர்ந்தும் உள்ளன்புடன் வணங்கிவர, வந்து தோன்றினார் அமரர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள்.

அமரர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் நுண்ணறிவு உள்ளவர்; விவேகம் நிறைந்தவர்; மன உறுதி உள்ளவர்; பலவகைத் தமிழ் நூல்களை எல்லாம் ஆர்வத்துடன் கற்று வந்தவர்; சமயப் பெரியார்களது சொற்பொழிவுகள் ஒவ்வொன்றையும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் அங்கு சென்று, அவைகளைச் செவிமடுத்துத் தனது அறிவை விருத்தி செய்து ஆன்மசுகமும் பெற்றார்.

தமிழ்மொழி மூலம் ஆசிரியப் பயிற்சி பெற்ற தராதரப் பத்திரம் பெற்றவர். பாடசாலைகளில் திறமையுடன் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தவர். கற்றல், கற்பித்தலில் பூரணமான அறிவு நிறைந்த நல்லாசிரியராகத் திகழ்ந்தார்.

அதிபர் பதவி வகித்தவர். பாடசாலை நிர்வாகத்தைத் திறம் பெறப் புரிந்து; மாணவர்களது படிப்பிலும், ஆசிரியர்களது படிப்பித்தலிலும் முன்னேற்றங் காணும் வண்ணமும், உபயோகம் நல்கும் வண்ணமும் தனது அதிபர் சேவையைத் திறம் பெறச் செய்து சகலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர்.

**"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகெலாம்**
**பேரறி வாளன் திரு"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்"

என்னும் தேவர் குறட்பாக்களுக்கும் எடுத்துக்காட்டாக நன்கு திகழ்ந்து கைக்கொண்டு ஆன்ம சுகமும் பெற்றவர்.

கரவெட்டி கிழக்கு, அமரர் வல்லிபுரம் தெய்வானை தம்பதிகளின் தவப் பயனாகத் தோன்றிய வள்ளிப்பிள்ளை என்பவரை, அமரர் வேலுப்பிள்ளை அவர்கள் திருமணம் புரிந்து விருந்தினரை உபசரித்தும், தருமங்கள் புரிந்தும், தெய்வம் தொழுதும் வருகின்ற போது இவர்களுக்கு "நன்மக்கட் பேறு" கிடைத்தது. இதனால் தம்பதிகள் இருவரும் மிகுந்த மனப்பூரிப்பு உற்றனர்.

1. திரு.வே.இளங்கோவன்
   இவர் புகழ்பெற்ற வைத்திய கலாநிதி

2. திருமதி இந்திராணி விமலேஸ்வரன்
   இவர் B.A ஆசிரியையாகக் கடமை புரிந்து வருகின்றார்.

3. திரு.வே.இளஞ்செழியன்
   இவர் வைத்திய சேவை புரிந்து வருகின்றார்.
   சிறந்த பண்பும் கருணை உள்ளமும் உள்ளவர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

**க.சி.சண்முகம்**
கரவை கிழக்கு,
ஓய்வுபெற்ற அதிபர்,
பாலபண்டிதர்.

மாமடுச் சந்தி,
486, சின்னப் புதுக்குளம்,
வவுனியா.
08.10.2005.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையின் செம்மல்

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

1. எண்பத்தோ ராண்டுலகம் ஏற்பநல் வாழ்வுதனைப்
பண்பாய் இயற்றிப் பிரிந்தகன்றார் - பண்பார்
முருகேசு வேலுப்பிள் ளையவர் மேலாம்
திருவானார் தெய்வத்தின் பால்.

2. செந்தமிழ் கற்றநற் பண்டிதன் தன்வழி
செந்தமிழ் கற்கத் துணைநின்றோன் - புந்திசால்
மேதை தமிழுலகு மேம்பா டடையமொழி
போதித்து வென்ற திரு.

3. தான்தோன்றக் காரண மான சமூகத்தின்
மேன்மைக் குழைத்தே முதன்மையுற்றார் - ஆன்மீகத்
தொண்டுபல செய்துமக்கள் தூயவழி சென்றுய்யத்
தெண்டித்துப் பாடுற்ற மான்.

4. சொந்த முயற்சியினால் தெய்வத் தலஞ்சிறக்க
அந்திமத்தி லும்பணிகள் ஆற்றியபேர் - புந்திசால்
மாந்த ருவக்கும் மனுநேயம் கொண்டநல்லோன்
சேர்ந்தான் இறைவனடி தான்.

5. சென்றாலும் வையம்நின் சீர்சொல்லும் செய்தவைகள்
பொன்றாப் புகழ்சேர்க்கும் பாக்கியத்தால் - என்றும்
நிலைத்திருப்பீர் எங்களுடை நெஞ்சங்கள் தம்மில்
நிலைத்திருக்கும் நின்பேர் நிசம்.

6. புலம்பினாள் செந்தமிழ்த்தாய் போனாயோ என்றே
கலங்கினார் மாணாக்கர் கற்றோர் - நிலமுமுனை
வாவென் றழைத்ததுவோ வல்லவன்நீ என்றதனால்
தூவா னுயிர்போந்த தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியர்

நல்லாசிரியருக்கு எதைக் காணிக்கையாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்பது உலகம் ஏற்றுக் கொண்ட உண்மை. இருந்தும் எனது ஆசிரியர் அமரர் வேலுப்பிள்ளை அவர்களுக்கு இச்சிறு காணிக்கையை அஞ்சலியாக வழங்குவது எனக்கு ஆத்ம திருப்தியை தருகின்றது. அமரர் வேலுப்பிள்ளை அவர்கள் நான் படித்த நெல்லியடி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றியவர். அக்கால கட்டத்தில் ஒரு ஆசிரியருக்கும் மாணவனுக்கும் எந்த இடைவெளி இருக்க வேண்டுமோ அந்த இடைவெளியையும் மரியாதையையும், அச்சத்தையும் நான் பேணி நடந்த நாட்கள் எனக்கு நினைவிற்கு வருகின்றது. அமரர் மு.சிவசிதம்பரத்தின் அரசியல் வாழ்வுடன் மிக நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தியவர் அமரர் வேலுப்பிள்ளை அவர்கள் அக்கால கட்டத்தில் ஆசிரியர் மாணவர் என்ற உறவு நிலைத்தாலும் எங்களுடனேயே இருந்த உறவின் இடைவெளி குறைந்து மரியாதைக்குரிய தோழமை உறவு ஒன்று ஏற்பட்டது. அப்போது தான் அவரின் மனத்தில் தேங்கியிருந்த எண்ணக் குவியல்களையும் அவர் நிறைவேற்ற ஆசைப்பட்ட கருத்துக்களையும் என்னால் அறிய முடிந்தது.

தான் பிறந்த மண்ணை கரவெட்டியை மிகவும் நேசித்த அமரர் அக்கிராமத்தின் வளர்ச்சிக்கு பல புதிய கருத்துக்களை மனத்திலே கொண்டிருந்ததைக் குறிப்பாகக் கல்வித் துறையில் அக்கிராமம் இன்னும் முன்னேற வேண்டும் என்ற ஆவல் அவர் மனத்தில் நிறையவிருந்தது உண்மை. அக்கிராமத்தில் நடந்த முன்னேற்றகரமான அபிவிருத்திக்கு அவர் மிகப் பெரிய உந்து சக்தியாக இருந்தார்.

அவர் சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர் சமுதாய நலனுக்கு அளப்பெரிய சேவை செய்தார். காலவோட்டம் அவர் தலைவர் என்று ஏற்றுக் கொண்ட சிவசிதம்பரத்தையும் அவரையும் வெவ்வேறு திசைகளில் பிரித்தது. இருவர்களுக்கிடையில் இருந்த நட்பும் பாசமும் அவர்களுக்கிடையில் குறையவில்லை. அவர் வவுனியாவுக்கு வரும் போது தவறாது என்னைச் சந்திப்பார். அவ்வேளைகளில் எல்லாம் பழைய நினைவுகளை மீண்டும் மீட்டுக் கொள்வோம். இழந்து போன பெறுமதிகளை எண்ணிப் பெருமூச்சு விட்டதும் உண்டு. என்னைக் காணும் போது "தம்பி" என வாஞ்சையுடன் அழைத்துத்தான் பேசுவார். அவருடைய நெருக்கத்துக்குரிய தலைவரைப் பற்றி மிக நேசமாகவும் விசாரிப்பார். இத்தகைய ஓர் உறவு எனக்கும் அவருக்கும் மனதளவில் ஓர் ஆதரவு தந்தது என்பது உண்மைதான். அவரின் மறைவை உடனடியாக அறிய முடியாத இடைவெளி எனக்கிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மறைவு ஒரு நல்ல ஆசிரியரை, தோழமையுள்ள நண்பரை இழந்ததற்கான ஓர் ஏக்கத்தை என் மனதில் உருவாக்கியது எனினும் கரவெட்டி கிழக்குப் பகுதி மக்களால் மறக்கப்பட முடியாத பண்பு நிறைந்த பழைய கால ஆசிரியரை அக்கிராமம் இழந்தது அக்கிராமத்தின் துர்ப்பாக்கியமே. அவரின் அரசியல் நண்பர் சிவசிதம்பரம் உயிருடன் இருந்திருந்தால் தேம்பியிருப்பார்.

என்னுடைய ஆசிரியருக்கு நான் கொடுக்கக் கூடிய காணிக்கையாக இச்சிறு அஞ்சலி அமைவதில் நான் ஆறுதல் அடைகின்றேன்.

**மு.சிற்றம்பலம்**
சட்டத்தரணி
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

**கி.சிவநேசன் (பா.உ)**

யார்க்கரு,

கரவெட்டி கிழக்கு,

கரவெட்டி.

07.10.2005.

# தமிழ்மொழி காத்து, அறநெறி வளர்த்த அன்பு ஆசான்

வடமராட்சியில் கற்றோர் செறிந்து வாழும் கிராமமாகிய கரவெட்டி கிழக்கில் வசித்த பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர் அமரர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் கொழும்பு மாநகரில் இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஒருகணம் அதிர்ச்சிக்கு உள்ளானேன்.

காரணம் நல் ஆசானை தெய்வமாக மதித்துப் போற்றுவது தமிழ் இனத்தின் பாரம்பரியமான பண்பாட்டு வடிவங்களில் ஒன்றாகும். அந்த வகையில் எனக்கு எழுத்தறிவித்து, அறநெறிக்கருத்துக்களை தந்து நல்ல மனிதப்பண்பை எமக்கு ஊட்டிய அந்த இறைவனை இழந்த பெருங்கவலை என்னைப்போன்ற ஆயிரக்கணக்கான அவரின் மாணவர்களுக்கு இருக்கத்தான் செய்யும். இதனால் இது இயற்கையின் நியதியாகிவிட்டதால், விதியின் சதியை எண்ணி வேதனைப்படுவதனை விட வேறுவழி எமக்கு இல்லை.

தமிழையும், சைவசமயத்தையும் வளர்க்க உழைத்த எம் ஆசான் சொல்வல்லோனாக மட்டுமன்றி செயல்வல்லோனாகவும் வாழ்ந்து, வாழ்க்கை நெறிவழி ஒழுகியவர். அதனால் அவரிடத்தில் **"மனிதம்"** எனும் பண்பு மேலோங்கி இருந்ததை நான் நன்கு அறிவேன்.

அன்புடன் அனைவரையும் அரவணைத்து அறநீதிக் கருத்துக்களைக் கூறி தன் இனிய குரலால் இன்முகம் காட்டி அறமே வெல்லும் என்பதை உணர்த்தி, அறவழி வாழ்வே மனித ஈடேற்றத்திற்கு வழி என எமக்கு வழிகாட்டிய பேராசான் இன்று எம்மிடத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயவழிபாடே ஆன்ம மேன்மைக்கு வழி செய்யும் என்பதை எமக்கு உணர்த்துவதற்காக **"சரணகமலாலயத்தை அரைநிமிட நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாத"** எனும் திருப்புகழை அடிக்கடி ஓதி எமக்கு இறைவழிபாட்டின் அவசியத்தை உணர்த்தி நிற்பார்.

ஆறறிவு படைத்த மனிதனுக்கு அறம் செய்ய வேண்டும் என்பதோடு மட்டுமன்றி ஐந்தறிவு ஜீவன்களும் தமது வசதிகளை பெறவேண்டும் என்பதில் கருணையுள்ளம் கொண்டவர். அதற்குச் சாட்சியாக கரவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயகர் ஆலய அறங்காவல் சபையின் சிரேஸ்ட பதவியில் இருந்தவேளை கோவிலின் அருகமைந்த கேணிக்கருகில் **"ஆவுரோச்சு கல்லமைத்து"** நீர்பருக வரும் கால்நடைகள் தமது சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்பதை ஓர் விழா எடுத்து, கல்விமான்களை வரவழைத்து, அறத்தின் மாண்பை மக்களுக்கு உணர்த்திய பெருமகன்.

காலத்தால் அழியாத காரியங்களை தனது வாழ்நாளில் செய்துகாட்டி மனிதவாழ்க்கை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதை சொல்லாலும், செயலாலும், தனது வாழ்க்கை முறையாலும் உணர்த்திய எனது பேராசானின் பிரிவுத்துயரினை அவரின் குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்வதில் திருப்தி அடைகின்றேன்.

அமரரின் நினைவலைகளை எம் தமிழ் இனத்தின் மனங்களில் நிறுத்தி வைக்கும் நோக்கமாக **பேராசிரியர் கணபதிப்பிள்ளை** அவர்கள் எழுதிய **"காதலியாற்றுப் படையை"** பிரசுரித்து வெளிவர இருப்பது பெரு மகிழ்வினைத் தருகிறது. இம்முயற்சிக்கு உழைத்த அன்னாரின் மகனுக்கும், குடும்பத்தாருக்கும் இவ்வேளையில் நன்றி கூறுவதுடன் என் ஆசானின் ஆத்மா இறைவனடி சேர இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**அல்லும் பகலும் அயராத் தமிழ்ப் பணிபுரிந்த**
**சொல்லும் செயலும் ஒன்றாய் காணும் என் ஆசானாம்,**
**வெல்லும் அறவழியே உழைத்த வேலுப்பிள்ளையவர்**
**நல்லுயர் முத்தி பெற்றிடவே இறையை இறைச்சுகிறேன்.**

**சாந்தி! சாந்தி! சாந்தி!**

**கி.சிவநேசன்,**
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ். தேர்தல் மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.வே அமரரானார்

மறைந்த அமரர் மு.வேலுப்பிள்ளை அவர்கள் மிகச் சிறந்த ஆசிரியராகவும், அதிபராகவும் இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றியவர். பல அறிஞர்கள் உதித்த கரவெட்டி கிழக்கில் இவரும் உதித்தவர். தன்னுடைய தமிழ் மொழியாற்றலால், மிகச் சிறந்த சமூக சேவையாளராகத், துடிப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட ஒரு சிறந்த மனிதன். பல அரசியற்கட்சித் தலைவர்களுடன் நட்புடனும் கொள்கைப் பற்றுடனும் செயற்பட்டார். இவருடைய அதிபர் சேவைக்குச் சான்றாக கரவெட்டி யார்க்கரு வித்தியாலயம், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் என்பவற்றில் இவரை நினைவு கூருகின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வள்ளுவர் சொன்னது போல **''தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்''** என்பதற் கிணங்க அவரது பிள்ளைகள் நல்ல நிலையிலிருப்பது அவரது வாழ்வியல் சான்றுக்கு சான்றாகும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

அன்பன்,

**ந.பாஸ்கரன்**

நெல்லியடி

கரவெட்டி

07.10.2005.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்வீரன் மு.வே

அமரர் மு.வேலுப்பிள்ளையும் நானும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்தோம். அவரைச் சக ஆசிரியர்கள் **மு.வே** என்று குறிப்பிடுவார்கள். எனது தமிழ்மொழிப் பற்றினால் அவருடன் நெருங்கிப் பழகினேன். 59ம் ஆண்டு செப்ரெம்பரில் ஆரம்பித்த தொடர்பு இவ்வருடம் செப்ரம்பரில் முடிவடைந்தது. கொழும்பில் இறுதிக் கிரிகைகள் நடந்ததாயினும் காலத்தால் ஏற்பட்ட தடைகளால் எனக்கு அதில் பங்குகொள்ளக் கொடுத்துவைக்கவில்லை. கொழும்பில் இடையிடையே எமது வீடுகளில் சந்தித்து பல விஷயங்கள் கதைத்து சந்தோஷமாக இருந்தோம். சில மாதங்களாக இருவருக்கும் ஏற்பட்ட கஷடங்களால் சந்திப்புத் தடைப்பட்டுவிட்டது. இது சகஜம் தானே.

இவருக்குச் சும்மா இருக்க முடியாது. பயனுள்ள விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இதனால் ஆசிரிய தொழிற் சங்கம், சமூக சேவை, கமத்தொழில், கோயில் வேலை ஆகியவற்றில் உற்சாகமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார். கஷ்டப்பட்டவர்களுக்குத் தானாகவே முன்வந்து உதவி செய்து கொடுப்பார். மிகவும் இளகிய மனம் நொந்தவர்களுக்கு ஒரு கைகொடுக்க வேண்டுமென்று நினைத்துச் செயல்படுவார். தன்னை நம்பியவர்களைக் கைவிடார்.

சமூக சேவையில் ஈடுபடுபவர்களுக்கு உயர்பதவி வகிப்பவர்களின் உதவி தேவைப்படும். இவைகளை ஈர்ப்பதற்கு தன் நம்பிக்கை வசீகரமான பேச்சு அவர்களின் சுபாவத்தை அறிந்து அதன்படி செயற்படல் போன்றவை சில, **"ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும் பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்"** மென்று சொல்வார்கள். இந்த ஆற்றல் இவரிடம் போதியளவு இருந்தது. ஒரு சிலரை தன்பக்கம் எடுத்துக் கொண்டால் மற்றவர்களைப் பிடிப்பது சுலபம். அவருக்கு எத்தனையோ நண்பர்கள் எல்லா மட்டத்திலும் இடங்களிலும் இருந்தமையால் என்னத்தையும் செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்றார். பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இவருக்குப் பரிச்சையமானவர்கள். இப்படி மு.வே தானும் வளர்ந்து வேறு பலரையும் வாழவைத்தார்.

அறுபத்துமூன்றாம் ஆண்டு நடுப்பகுதியில் இவரது தொழிலில் ஒரு தொய்வு ஏற்பட்டது. அவர் சளைக்கவில்லை. வவுனியாவில் காணி எடுத்துக் கமம் செய்து தன் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டார். ஏற்பட்ட பாதிப்பால் களையாது சளையாது போராடித்தான் நிரபராதி என்று நிலைநாட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவனுக்கு உள்ள பெருமை வீழ்ச்சியை உயர்ச்சியாக்குவது. பல ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரனாகி விட்டார்.

இதன் பின்பு தான் அதிபர் பதவி பெற்றார். அத்துடன் நின்று விடவில்லை பட்டம் பெற வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. முயற்சி திருவினையாக்கும் என்ற வாசகத்திற்கமைய கற்றலில் இறங்கி தமிழ், பொருளியல் ஆகிய பாடங்களுடன் பட்டப்படிப்பையும் முடித்தார். மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் நிறைந்த விடயம் யாதெனில் பின்பு பல பட்டப் படிப்பில் ஈடுபட்ட மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களை பட்டதாரியாக்கியது தான்.

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக முடிசூடுவது போல யாக்கரைப் பிள்ளையார் கோவில் புனருத்தாரண வேலை இவர் தலையில் விழுந்தது. தான் அதை ஏற்றுத் தடைகள் எல்லாவற்றையும் நீக்கித் திறமையாக முடித்து வைத்தார்.

சாதாரண வாழ்க்கையில் எத்தனையோ மனிதர்களை எதிர்த்து வென்றவருக்கு தன்னைப் பிடித்த நோய்களை ஒன்றும் செய்யமுடியாமல் போய் விட்டது. கடைசிக்காலம் ஓரளவு துன்பமானதாகத் தான் போய்க் கொண்டிருந்தது. எமது கர்மவினையை நாம் தான் அனுபவித்துத் தொலைக்க வேண்டும். மனைவியோ பிள்ளைகளோ உடல்நோவைக் குறைக்க உதவலாம். அவ்வளவு தான். விநாயகப் பெருமான் அவரை ஏற்றுக் கொண்டிருப்பார் என்ற நம்பிக்கையில் நாம் இருப்போம்.

அவருக்கு எச்சங்கள் மூன்று மூவரும் சிறப்பாக பெருமை தரக் கூடிய நிலையிலுள்ளனர். இதற்குமேல் என்னத்தை எதிர்பார்ப்பது.

திருமதி வேலுப்பிள்ளைக்கு தான் குடும்பத்துக்குத் தொடர்ந்து செய்த சேவைகளை நினைத்து மனத்திருப்தியுடன் மேலும் வரப்போகும் சிறப்புகளை அனுபவிக்கப் பாக்கியம் பெற்றதை நினைத்து அவர்களின் நிழலில் வீட்டில் இறைசிந்தனையுடன் காலத்தைக் கழிக்கலாம்.

சுபம்.

அன்பன்

**ப.சச்சிதானந்தன்**

ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மனிதம்” நிறைந்த மனம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் சில ஆண்டுகளாக நடாத்திவரும் வாராந்த
நிகழ்வு **“அறிவோர் ஒன்று கூடல்”**
அந்த நிகழ்வுகளில் பங்குபற்றுவோர் பலர்.
அவர்களுள் முன்னாள் ஆசிரியர்கள் சிலரும் அடங்குவர்.
அந்த ஆசிரியர்களில் ஒருவரையே எல்லோரும், அன்பொழுகத்
தனித்துவமான முறையில் **“மாஸ்டர்”** என அழைப்பார்கள்.
அப்படித் தனித்துவமாக அழைக்கப்பட்ட அந்த ஒருவரே
“வேலுப்பிள்ளை மாஸ்டர்”
அவ்விதம் மற்றவர்களால், தனித்துவமாக, இவர் அழைக்கப்
பட்டதற்குரிய காரணம்தான் என்ன?
மற்றவர்களுக்கு நல்வழி காட்டியதாலேயா?
அல்லது,
அவர்களின் அறிவுப் பசிக்குத் தீனி போட்டதன் காரணமாகவா?
இல்லவே இல்லை.
தன்னுடன் பழகியவர்களின் வாழ்விலே,
அவர்களின் நன்மை தீமைகள் ஒவ்வொன்றிலும் பங்கெடுத்து,
அவர்களின் அல்லல்களிலும் அவலங்களிலும் ஈடு கொடுத்து,
அவர்களின் ஆசாபாசங்களில் உறுதுணையாய் நின்று,
விளங்கிய காரணங்களாலேயே
இவரை அறிந்தவர்கள்
**“வேலுப்பிள்ளை மாஸ்டர்”**
என, இவரை, அன்பொழுக அழைத்தனர்
“மனிதம்” நிறைந்த மனம் இருந்த இந்த மனிதன்
மற்றவர்கள் மனதில் உயர்ந்து நின்ற
“மாமனிதன்”
அவருடன் பழகியவர்கள் நெஞ்சில் என்றும் நீங்காது நிற்பவர்,
“வேலுப்பிள்ளை மாஸ்டர்”
“இனிச் சொல்வதற்கு என்?”- கம்ப இராமாயணம்.

10/4, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு - 6.

சு.சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரிய சிந்தனையாளன்

யாழ்ப்பாணம் கல்வி, செல்வம், வீரம் போன்றவற்றால் புகழ்பூத்த நகரம் சைவசமய பாரம்பரியங்களை வளர்க்கின்ற காப்பாற்றுகின்ற உலகம் போற்றும் உத்தமர்கள் வாழ்ந்த திருநகரம் யாழ்ப்பாண பட்டணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் தெருவில் 17வது மைலில் இருக்கும் கிராமம் கரவெட்டி நீர்வளம், நிலவளம் நிறைந்த பனைமரங்கள், தென்னைமரங்கள், வாழை, கமுகு, வயல் தோட்டங்கள் நிறைந்த வளமுள்ள பிரதேசம் அங்குள்ள மக்கள் தெய்வ காரியங்களில் நிலையான நம்பிக்கை கொண்டு சமயத்தொண்டு செய்தும் ஆன்மீகத்தை வளர்த்தும் விரதங்களை அனுட்டித் தும் தமது பண்பாட்டுடன் சமயத்தை இணைத்து வாழ்பவர்கள். அது மாத்திரமன்றி கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள், கற்றவர்களுக்கு குறைவில்லை. வாய்மொழி பாரம்பரியத்தை முன்னெடுத்து செல்லும் நாட்டுப் பாடல்கள், கூத்து மரபு, சிறு தெய்வ வழிபாடு என்பவற்றை பேணிக் காத்த கிராமம்.

இக்கிராமத்தில் வாழ்ந்தவர்தான் பெரியார் அமரர் பண்டிதர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள். ஆசிரியராக, அதிபராக பல பாடசாலைகளில் கல்விப் பணி செய்தவர். மலர்ந்தமுகம், மகிழ்ந்த மனம், கனிந்த பேச்சு இவையெல்லாம் ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய சொத்து இவற்றைத் தன்னகத்தே கொண்ட பெரியார் அவர்கள் தமது இறுதிக்காலம் வரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளான **அறிவோர் ஒன்றுகூடல், நூல் நயம் காண்போம், சுகாதாரக் கருத்தரங்கு** போன்ற வற்றில் கலந்து கொண்டு தமது மனதில்பட்ட கருத்துக்களை துணிந்து எடுத்தியம்பும் திறமை மிக்கவர். அவர் சபையில் இருக்கும்போது கலகலப்பாகத்தான் இருக்கும்.

"வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது, கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் குறையாது கல்வி". அதன் சிறப்பை உணர்த்திய பெரியார் நினைவாக கரவெட்டி மண்ணில் தோன்றிய ஈழத்தின் முதலாவது தமிழ் கலாநிதி என்ற சிறப்புக்குரிய பேராசிரியர் சு.கணபதிப்பிள்ளை அவர்களின் **'காதலியாற்றுப்படை'** என்ற நூலை பிரசுரிப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். சில பழைய நூல்களை பெற அரிதாக இருக்கும் இக்காலத்தில் இந்நூல்கள் பலரின் கையில் கிடைக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

**சமூகஜோதி ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி ஜே.பி**

உதவிப் பொதுச்செயலாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்

தான் பெற்ற மக்கள் வேறு மருமக்கள் வேறு என்ற பேதத்தை உங்களிடம் ஒருபோதும் நாம் கண்டதில்லை மாமா. நாம் கலங்கிய நேரமெல்லாம் உயிர்கொடுத்தேனும் உதவி செய்யும் மனப்பாங்கு நிறைந்த மாமாவை இன்று நாம் இழந்து கதிகலங்கி நிற்கின்றோம். மாமா! கரைதேடும் படகிற்கு கலங்கரை விளக்கம் போல் வழிகாட்டினீர்களே!! இன்று, இங்கே பதைபதைத்து நாங்கள் நிற்க, நீங்கள் பறந்தோடிப் போனதன் மாயமென்ன?

காலத்தினால் நீங்கள் செய்த உதவிகளையெல்லாம் நாம் ஞாலம் உள்ளவரை மறப்போமா? எமக்குத் தேவையேற்பட்டவிடத்தெல்லாம் தன் உடல்நிலையையும் பாராது காலநேரத்தையும் கருத்திற் கொள்ளாது குறிப்பறிந்து உதவி செய்யும் உத்தம குணம் கொண்டவர் எங்கள் மாமா. எங்கள் தந்தையார் கடும் நோயுற்றிருந்த வேளையில் தினமும் தவறாது எமது இல்லத்திற்கு வருகைதந்து ஆறுதல் வார்த்தைகள் கூறி அரவணைத்தீர்களே! மாமா உங்கள் அன்புள்ளத்தை நாம் எவ்வாறு மறப்போம்? பந்தமென்று சொல்லப் பல் உறவுகள் இருந்தாலும், சொந்தம் என்று சொல்வதற்கு எம்மத்தியில் நீங்கள் இன்றில்லையே மாமா! எழுத்தில் அடக்கலாமோ உங்கள் கருணையின் உள்ளமதை சொல்லியே முடிக்கலாமோ நீங்கள் புரிந்த உதவிகளை.

குடும்ப விளக்காக, ஆசிரியராக, அறிவுக்கடலாக, அன்பின் பொக்கிஷமாக, தமிழோடு, நிறைவோடு வாழ்ந்த பெருந்தகை நீங்கள். பல்லோரும் போற்றும் பண்பாளனாய் பாரினிலே வாழ்ந்து காட்டிய மாமாவே! காலத்தால் அழியாத நெஞ்சின் நினைவலைகள், இந்த ஞாலத்தில் நாம் உள்ளவரை எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீங்காத நினைவாக நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சும்,

அன்பு மருமக்கள்,
**சிதம்பரநாதன், தமயந்தி, பத்மா,**
**வைரவநாதன், யோகு,**
**ஆனந்தன், கரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமுள்ள அத்தானே............

அத்தான் என அழைத்தோம் எம் அருமருந்தென வியந்தோம்!
முத்தான எங்கள் அத்தான் மூச்சுவிட மறந்ததென்ன!!
வித்தகனாம் உங்கள் மேல் விழிவைத்த காலனவன்
சத்தமின்றி வந்தெங்கள் சொத்தைத்தான் பறித்ததென்ன!!!

கள்ளமற்ற புன்னகையும் கபடமற்ற பேச்சுக்களும்
உள்ளத்தை உருக்குதத்தான் உதடுகள் துடிக்குதத்தான்
வெள்ளை உள்ளம் கொண்டவனே வெற்றித்திருமகனே
வள்ளலே பெருந்தகையே வாரீரோ எமைக்காண

தந்தை மறைந்தவுடன் எந்தாயுடன் இருந்தவேளை
எந்த இடர் வந்திடினும் எம் கடமை செய்தீரே
பருவமதில் எங்களையும் பண்புடன் வளர்த்தீரே
இருவரையும் இனிதான இல்லறத்தில் இணைத்தீரே

உடல்நலக் குறைவென்று உன்சேதி கேட்டவுடன்
தடம்புரண்டு போனோமத்தான் தத்தளித்து நின்றுவிட்டோம்
விரைந்தோடி வந்தங்கு நின்முகத்தை நான் நோக்க
சிதம்பரம் நீ வந்தாயோ எனப் புன்முறுவல் பூத்தீரே

எப்படி மறப்போம் அத்தான் யாருக்கெடுத்துரைப்போம்
இப்படித்தான் நடக்குமென்று எள்ளளவும் எண்ணவில்லை
ஏங்குகின்றோம் எந்நாளும் எம்மிதயத்துயர் தீர
பாங்குறவே பகர்ந்திடுவீர் பாசமுள்ள அத்தானே.

மைத்துனிமார்,
**சின்னப்பிள்ளை**
**சிதம்பரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் இரங்கல் உரை

பெரு மதிப்புக்கும் அன்புக்கும் உரிய எனது நல்லாசான் முருகேசு வேலுப்பிள்ளை அவர்களின் இறப்பறிந்து மனம் வெதும்பிய அவரது அன்புக்குரிய மாணவர்கள் சார்பில் இவ்விரங்கல் உரையை எழுத கிடைத்த சந்தர்ப்பத்தை எனக்குக் கிட்டிய பெரும் நோக்காகக் கருதுகிறேன்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழ் ஆசிரியர் என்று கூறினால் அது முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் தான். 1960களில் ஐயா அவர்கள் எமக்காற்றிய அரும்பணியை எழுத்தில் வரைவது இயலாது.

பதின்நான்கு, பதினைந்து வயதில் கள்ளம் கபடமற்று, பொறுப்பற்றுச் சுற்றித்திருந்த எமக்கெல்லாம் கல்விக் கண்ணைத் திறந்து ஒளியேற்றி யதுடன் மட்டுமன்றி தந்தையாக, நல்லாசிரியராக இருந்து அன்பு, பயிர்ப்பு, பொறுமை, சமூகப் பொறுப்பு என்பவற்றை ஊட்டி வளர்த்த எம்மாசான் இன்று எம்மத்தியில் இல்லை. இருப்பினும் எம் ஆசிரியர் எமக்களித்த நல்ல போதனைகளும் கற்பித்தலின் போது அவர் பயன்படுத்திய நகைச்சுவை களும் இன்றும் எம்முடன் நிலைத்திருக்கின்றன.

அக்காலத்தில் தமிழாசிரியர் என்றால், எம் ஆசிரியர் தூய வெள்ளை மேற்சட்டையும், வெள்ளை வேட்டியும் அணிந்து வெள்ளை மனத்தோடும் தூய அன்போடும் எம்மை வழிப்படுத்தினார். இவரது நகைச்சுவை உணர்வும் எம்மை எல்லாம் அவர்பால் ஈர்த்தன.

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லை எனினும் அவர் எமக்களித்த போதனைகள் என்றென்றும் எம்மோடு வாழும்.

இனிய ஆசானே, பாசமான தந்தையே, புன்னகை நிறைந்த உனது இனிய முகமும் தூய வெள்ளை உடையில் இன்னும் எம் கண்முன் நிறைந்துள்ளது. எமது வாழ்வின் வழிகாட்டியாக இருந்தவரே,

எம் வாழ்வுக்கு முன்னுரை வழங்கிய அன்பு ஆசானே இறைவன் உங்களை ஆட்கொள்வாராக.

**வே.இராஜரட்ணம்**
பழைய மாணவன்
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை ஆசி வேண்டுகின்றேன்

எமது அயல்வீட்டில் முருகேசு வேலுப்பிள்ளை குடும்பம் குடியிருக்க வந்த போது தான் அவர்களை நான் அறிமுகம் செய்து கொண்டேன். ஆரம்பத்தில் அந்நியனாகப் பார்த்தேன். பின்னர் அயலவராகப் பழகினேன். காலப்போக்கில் நல்லதோர் நட்பை வளர்த்துக் கொண்டோம். ஆண்டுகள் அதிகரிக்க அதிகரிக்க நட்பின் வலிமையும் அதிகரித்தது.

திரு.வேலுப்பிள்ளை அவர்கள் அன்பும் கருணையும் அறிவும் நிரம்பிய சிறந்த வழிகாட்டியாக இருந்து எம்மை வழிநடத்தினார். அவரின் நட்பு அவர்களது குடும்பத்தாருடன் ஆழமான ஒரு உறவை ஏற்படுத்தி விட்டது. சிறந்த ஒரு சமூக சேவையாளராக இருந்தவர் இறுதிக் காலத்தில் ஆய்ந்து ஓய்ந்து இறந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனை வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாந்தி!!!

**திருமதி. இந்திராணி சிவகாந்தி**
(பிரமகுமாரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர வைத்த செய்தி

அப்பா இறந்த செய்தி கேட்டு அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். அவர் செய்த நல்ல செயல்களின் பொருட்டு அவருக்கு இறைவன் நிச்சயம் நல்ல ஒரு இடத்தை (மோட்சம்) அளிப்பார். எங்கள் செபவேளைகளில் இறைவனிடம் மன்றாடுகிறோம்.

அவருடன் பழகிய நாட்களை அசைபோட்டுப் பார்த்தேன். இந்திராவுடன் ஏற்பட்ட நட்பின் காரணமாக அவரின் குடும்ப உறுப்பினரில் ஒருவராகி விட்டேன். 'யசி' என அன்பொழுக அழைக்கும் குரல் இன்னும் காதில் ஒலிக்கிறது. வீட்டுக்கு வரும் எவரையும் விருந்தோம்புவதில் அவருக்கு நிகர் அவரேதான்.

தன்னை அண்டியோரை அரவணைத்து உதவி செய்து படிக்க உதவி இன்று உயர்ந்த நிலையில் இருப்பவர்களை நான் அறிவேன். பட்டதாரி ஆக வேண்டும் என்ற அவரின் இலட்சியத்தை ஓய்வு பெற்ற பின் நிறைவேற்றி யதைக் கண்டு வியந்தேன். பாடசாலை நாட்களில் பாடசாலையை தனது வீடாக கருதி அக்கறையுடன் செயற்பட்டார். இன்னும் பல........ அவரின் நினைவுகள்.

அவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

அன்பு,<br>
**யசி** (யசிந்தா அன்ரன்)<br>
தபாற்கந்தோர் எதிர்,<br>
நெல்லியடி, கரவெட்டி.<br>
28. 08. 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலைகள்....

ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்ட இந்த மாதத்தில் வாசிப்பு மாதமாகக் கொண்டாடப்படும் இத்திங்களில் ஒரு நல்லாசிரியராய் இருந்து பற்றற்றுப் பணி செய்த திரு முருகேசு வேலுப்பிள்ளை ஆசிரியரின் மனமகிழ் சேவை பற்றி நன்றி நவில நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

எனது மிகச் சிறு பராயத்திலிருந்து அவரின் அறிவு ஆற்றல் மனப்பாங்கு அவற்றால் ஒளிர்ந்த சேவையை நன்கு தெரிந்து கொண்டவன் என்ற வகையில் அறிவின் களஞ்சியமாக விளங்கும் வடமராட்சி வாழ் மக்கள் சார்பாக சில வார்த்தைகள் கூறுவதில் மட்டிலா மகிழ்வு.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை நன்கு படித்தால் மட்டும் போதாது என்ற அவாக் கொண்ட இந்த ஆசான் கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம், தேவார திருவாசகங்களை மனப்பாடம் பண்ணிக்கொண்ட ஓர் பழைய தலைமுறையைச் சார்ந்த ஆசிரியர்.

இதனால் வடமராட்சியில் கீர்த்திமிகு கல்லூரிகளில் தமிழ், சமய ஆசிரியராக விளங்கி, பின் அதிபராகி தமது புலமையை மாணவ ஆசிரிய சமூகத்துக்கு வழங்கி வாழ முடிந்தது.

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத்து ஊறும் அறிவு.**

என்பதற்கேற்ப பல நூல்களையும் கற்றுக் கொண்டே இருந்தார் என்பதற்கு பட்டிமன்றங்களில் தமிழ் சமய விழாக்களில் இவர் ஆற்றிய பேச்சுக்கள் இவரின் புலமைக்குச் சான்றாகின்றன.

கல்வியியலின் முக்கிய கோட்பாடுகளை மாணவர்களிடம் வளரச் செய்ய வேண்டுமென்பதில் தீவிர ஈடுபாடு கொண்டு செயற்பட்டவர் மாணவர்களின் அறிவு வளத்தினை (Intellectual Dimension) பெருக்குவதில் தனது ஆற்றலைச் செயற்படுத்தினார்.

சிறந்த மாணவ சமுதாய அமைப்பிற்கு அறிவு வளத்திற்கு நிகராக ஆன்மீக வளமும் (Spiritual Dimension) ஒளிரவேண்டும், அன்றேல் அக்கல்வியால் பயனில்லை என்பதை தனது கோட்பாடாகக் கொண்டு செயற்பட்டார், திருமுறைகளை நன்கு ஆழ்ந்து கற்றதினால், சிறந்த சமய ஆசானாக விளங்கி சிறந்த கல்விக் கோட்பாட்டினைச் செயற்படுத்த முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் சிறந்த உடற்கட்டமைப்பினை (Physical Dimension) கொண்டு விளங்க வேண்டும். தானே ஒரு பெரிய விளையாட்டு வீரன்போல் துடுதுடிப்புக் காட்டி, மாணவர்களை விளையாட்டுத் துறையிலும் வெற்றிகள் பெறவைத்தார்.

இவரின் ஊக்கத்திற்கு ஊக்கமாக அமைந்தார். அவர் தம் மனைவி:

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு**

**இவருடைய சேவைக்கு அவர்தம் மனை**
**யாளின் அன்பு அச்சாணி யாயிற்று.**

ஏழைகள் மீது பரிவுடையார், தமது சமூகத்தின் வறியோருக்கு இயன்றளவு உதவிகள் புரிந்து ஏற்றத்துக்கு ஏணியாய் விளங்கினார். எமது சிறந்த கவின்மிகு பேச்சாளர், பேராசிரியர் திரு. சிவலிங்கராசா அவர் உதவிகள் குறித்து அடிக்கடி சொல்வதுண்டு. அவர் உதவி செய்யத் தயங்குவதில்லை.

தாம் பிறந்த ஊர்ப் பாடசாலையில் அதிபராய் விளங்கும் வாய்ப்பினைப் பெற்ற அவர், தமது பாடசாலை வளர்ச்சிக்கு பெரும் பங்கினை ஆற்றும் பேற்றினைப் பெற்றார்.

அதிபராய் இருந்த காலத்திலும், ஓய்வு பெற்ற பின்பும், உருக்குலைந்து போன தமது யார்க்கும் அருளும் யார்க்கரு பிள்ளையார் ஆலயத்தினை மிகச் சிறப்பாக புனருத்தாபனம் செய்து கும்பாபிஷேகம் செய்து, தாம் பிறந்த கிராம மக்களின், கிராமத்தின் மகிழ்ச்சிக்கும், சிறப்புக்கும் அளப்பரிய தொண்டினைப் புரிந்தார்.

அவர் தொண்டினை, அவர் தம் பிள்ளைகளும், சிறந்த அறிவியலாளர் களாய், விளங்குவதால், தொடர்கின்றார்கள் என்பது மகிழ்வூட்டுகின்றது.

சமய, சமூக தொண்டாற்றிய அவர் ஆன்மா இறை திருவடி அடைவதாக.

**க.மார்க்கண்டு**
யார்க்கரு, கிழவிதோட்டம்
கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும்....

உலகின் நெளிவு சுழிவுகளை அறியாப்
பருவத்தில்
அ, ஆ எழுதிப் பழகும் பருவத்தில்
கன்னிப்பாட்டி அறிமுகம் செய்து வைத்தது
அறம்
தேவர் குறளும், திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும், முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என் றுணர்' ந்த
ஔவை தமிழர்களையும் 'உணர் என்று
அறிவுறுத்துகிறார்.

தமிழை கசடறக் கற்றவர்கள் அதற்குத்தக நிற்காது அறம் புறமாக வாழ்கின்றார்கள்.

அறம் கூற்றாவதும் மறந்து மனிதம் மறந்த மாமனிதர் மலிந்த இக்காலத்தில்,

தனித்துவமான ஒருபாதை வகுத்து வாழ்ந்தவர் அண்மையில் அமரத்துவமடைந்த குணகரவை முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள்.

அவர், 'தக்காரோ தகவிலரோ என்பதைத் தெரியச் செய்ய அன்னாரின் 'எச்சங்கள்' சாட்சியாக வாழ்கிறார்கள்.

அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் பங்கு கொள்ளும்.

அன்பன்
**"குணகரவை சிவகுடிலன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடுத்தவனே எடுத்தான்

திருவாளர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவர் கடந்த வருடம் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார். யாரும் எதிர்பார்க்காதவாறு காலனைக் காலால் உழைத்த நீலகண்டனாக உடல் தேறினார்.

மீண்டும் அவர் தம் குடும்பத்தை மீளாத்துயரில் ஆழ்த்தி நீண்ட துயில் கொண்டமை எமக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்துள்ளது.

ஆசிரியராக, அதிபராக, ஆன்றோனாக, சான்றோனாக, நல்லதோர் வழிகாட்டியாக வாழ்ந்த உங்கள் வாழ்க்கை அனைத்தும் மகன் மூலம் நான் அறிவேன்.

படைத்தவன் என்றோ பறிப்பான் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'**

என்ற குறளை மெய்யாக்கி அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. இராஜமனோகரி புலேந்திரன்**
(முன்னாள் பா.ம.உறுப்பினர் - வவுனியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தும் மறையாத எனது ஆசான்

''காயமே இது பொய்யடா - வெறும்
காற்றடைத்த பையடா''

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

காலதேவன் கட்டளையில் பிறப்பும் இறப்பும் இயற்கையே. நல்லவர்கள் இவ்வையத்துள் நீண்டநாள் வாழ்வதில்லை என்ற நியதிக்கு ஏற்ப வேலுப்பிள்ளை ஆசிரியர் 15.09.2005 சிவபதமடைந்த போதும் ஆசிரியர் உலகில் அணையா விளக்காக ஒளிர்கின்றார்.

மரணம்
காரண மற்றது
நியாய மற்றது
நியமங்களும் விழுமியங்களும்
உறைந்து போகச் செய்யும்
முடிவில்லாத அமைதி

மெலிந்த உடல் அதனுள்ளே அறிவார்ந்த உள்ளம். அது அன்பானது, கருணையானது, உறவுகளை உள்வாங்குவது நடுநிலையானது, தவறு களை தவறாது சுட்டிக்காட்டுவது. புதிய ஆளுமைகளை உருவாக்குவது, புதுமைகளை வரவேற்பது ஆனால் மரபுகளையும் பாரம்பரியங்களையும் மதிப்பது. இவை நான் என் ஆசானிடம் கண்ட மனிதப் பண்புகள்.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழை போல தன்னைத் தந்து தியாகியாகலாம்.

என்பவற்றைத் தனது இலக்கணமாக்கி மற்றவர்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற்ற ஆசானின் மறைவு ரணத்தை ஏற்படுத்துகின்றது.

தன் மனைவிக்கு அன்புக் கணவராகவும் பிள்ளைச் செல்வங் களுக்கு நல்ல தந்தையாகவும், ஆசானாகவும், நண்பனாகவும், வழிகாட்டி யாகவும் தொழிற்பட்டு சமூகம் போற்றும் பிரஜைகளாக உருவாக்கி அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்து பேரப்பிள்ளைகளையும் கண்டு களிப்புற்று இருந்த காலத்தில் காலன் கண் வைத்துவிட்டான். அவர் ஆத்மா சாந்தி பெறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற முதுமொழிக்கு ஏற்ப மாணவர்களை இனம் கண்டு, அவர்களின் திறன்களுக்கு ஏற்ப சமநிலை ஆளுமை உடையவர்களாக உருவாக்கி சமூகத்தில் உலவ விட்டார். இக் கல்விப் பணி மூலம் அறிவறிந்த மக்களை உருவாக்கும் சமூகப் பணியைச் செய்துள்ளார். எனது ஆசான் ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மாணிக்கவாசகர் வித்தியாலயம், கட்டைவேலி தமிழ் கலவன் பாடசாலை, யார்க்கரை தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

ஆசான் வேலுப்பிள்ளை அவர்கள் தான் வாழ்ந்த கிராமத்தின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (கட்டைவேலி) அங்கத்தவராக இருந்து அச்சங்கத்தை நெறிப்படுத்திச் சரியாக இயங்கச் செய்ததுடன் மக்களுக்கு வேண்டிய பல்வேறு தேவைகளையும் பெற்றுக் கொடுத்தார்.

கிராமங்களில் கோயில்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை சமய வழிபாட்டு இடங்கள் மட்டுமல்ல. அக்கிராம மக்களின் கல்வி, கலாசாரம், மரபுகள், பழக்கவழக்கங்கள், பொருளாதாரம், சமூக உறவுகள் போன்ற பலவற்றுடன் தொடர்புபட்டவை. வேலுப்பிள்ளை அவர்கள் யார்க்கரைப் பிள்ளையார் கோயிலை மையமாகக் கொண்டு மேற்குறித்த தொண்டுகளை ஆற்றியுள்ளார். எனவே அவர் அக்கிராம மக்களின் மனதில் நிறைந்துள்ளார்.

வேலுப்பிள்ளை அவர்கள் தனது இறுதிக் காலத்தைக் கொழும்பில் கழித்தார். இக்காலத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்க நிகழ்வுகளில் தவறாது கலந்துகொள்வார். இங்கு வாரத்தில் இரு நிகழ்வுகள் நடைபெறும். ஒன்று 'அறிவோர் ஒன்று கூடல்' இதில் 'திருக்குறள்' அக்குவேறு ஆணி வேறாகப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு இலக்கண மரபுக்கமையத் தனது ஆணித்தரமான கருத்துக்களை வெளிப்படுத்தி யுள்ளார்.

மற்றொன்று 'நூல் நயம் காண்போம்' என்ற நிகழ்வு இதில் நாவல், சிறுகதை, கவிதை நூல்கள் போன்றவை நயம் காணப்பட்டன. இவை தொடர்பாகக் கருத்துக் கூறும் போது அவருடைய இலக்கியக் கோட்பாட்டு அறிவு, வரலாறு, சமூகவியல், உளவியல், அரசியல் போன்ற தளங்களில் நின்று தனது நூல்களில் உள்ள நயங்களை எடுத்துக்காட்டுவதுடன் பகுப்பாய்வு ரீதியிலும் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவார். சில வேளைகளில் சபையில் கருத்து மோதல் கூட நிகழ்வதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளை அவர்களின் ஊண் உடம்பு அழிந்த போதும் அவர் ஆற்றிய ஆசிரியப் பணி, சமயப் பணி, இலக்கியப் பணி, சமூகப் பணி என்பவை என்றென்றும் அவரை நினைவுபடுத்தும் என்பதில் ஐயம் இல்லை.

'ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக'

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாணவன்
**க. த. இராஜரட்ணம்**
பிரதி முதல்வர்
இந்துக் கல்லூரி
கொழும்பு - 04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய ஆசானை இழந்துவிட்டோம்

என் ஆசான் உடல், மறைந்தாலும் அவரின் நினைவலைகள் மறையவில்லை. அவர் கருத்துக்கள் ஆக்கங்கள் எல்லா மாணவ மனங்களிலும் நிறைந்திருக்கும்.

கம்பராமாயணப் பாடல்களை மிகவும் அழகாகவும் நகைச் சுவையாகவும் ஆழமாகவும் புதுவித கம்பனைப் போல் எங்கள் மனதில் பதிய வைத்தார்.

கருணை உள்ளங் கொண்டு ஆண், பெண் என்று பாராமல் ஒரு தந்தையின் உரிமையோடு எங்களை அரவணைத்தார். மாணவர்களுக்குள் தானும் ஒரு மாணவனாகவே நடமாடுவார்.

நல்லதொரு இலக்கிய ஆசானை இழந்த உணர்வுகள் என்றும் என்னையும் சகமாணவர்களையும் விட்டு அகலாது.

என் குருவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

என்றென்றும் நினைவில்,
**வீ.தவம் (சுப்பிரமணியம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் நினைவில் நிற்கும்
## அமரர் திரு.முருகேசு வேலுப்பிள்ளை

மலர்ந்த முகம் அன்பான வார்த்தைகள் என்றும் மறக்க முடியாத நினைவுகள். மறைந்த வேலுப்பிள்ளை ஆசிரியர் எனக்கு அறிமுகமாகிக் கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள் ஆனால் நெருங்கிய பழக்கம் 1975ம் ஆண்டிலிருந்து தான் ஏற்பட்டது.கால் நடை வைத்தியராகச் சேவையில் ஈடுபட்டகாலங்களில் அதிபரின் வேண்டுகோளிற்கிணங்க அவர்களின் கால் நடைகளில் வைத்திய தேவைகளின் நிமித்தம் அன்னாரின் மனைவி அடிக்கடி போய் வந்துள்ளேன்.அக்காலங்களில் பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவோம் அக்கலத்துரையாடல்களின் மூலம் அன்னாரின் ஆசிரியசேவை பற்றியும் மாணவர்களை எவ்வாறு அவர் வழிநடத்துவார் என்றும் நிறையவே அறிந்து எங்கள் ஊர் ஆசிரியர்கள் பற்றி பெருமிதப் பட்டுள்ளேன்.

யாழ் குடா நாட்டில் பாடசாலைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பெருமைவாய்ந்த ஊராகிய கரவெட்டியில் தோன்றிய வேலுப்பிள்ளை ஆசிரியர் 43-44ம் ஆண்டுகளில் கோப்பாய் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகி, கொழும்பு, மிகுந்தலை, அநுராதபுரம் போன்ற இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றி, மறைந்த அதிபர் A. D. சுப்பிரமணியத்தின் வழிகாட்டலில் கட்டைவேலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராகவிருந்து, அதன் அதிபராகிப் பின் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலையிலும் இறுதியாக யார்க்கரை விநாயக வித்தியாசாலையிலும் கடமையாற்றி இளைப்பாறினார். இளைப்பாறியும் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கல்விக்கு வயதெல்லை இல்லை யென்பதற்கிணங்க அன்னார் 60ம் வயதில் வெளிவாரி மாணவனாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியானார். தான் பெற்ற கல்விச் செல்வத்தை அவரை தேடி வந்தோர்க்கு அவர் அளிக்கத் தவதியதில்லை பிறர்பிள்ளை தலை தடவத் தன்பிள்ளை தானே வளரும் என்பதற்கிணங்க அன்னார் தன் பிள்ளைகளையும் நல்வழிப்படுத்தி வழிநடத்தி மூத்தமகன் இளங்கோவன் இலண்டன் மாநகரில் பணிபுரியும் ஓர் வைத்தியராகவும் மகளை கொழும்பு மாநகரில் பணிபுரியும் ஓர் ஆசிரியையாகவும் இளைய மகனை கொழும்பு மாநகரில் கடமைபுரியும் வைத்தியராகவும் கண்டார். மறைந்த அதிபர் பல சமூகத்தொண்டுகளில் குறிப்பாக யார்க்கரு பிள்ளையார் கோவில் பணியில் முன்னின்று உழைத்த ஒரு பெரியார். 1995ம் ஆண்டு கோவிற் கும்பாபிஷேகத் திற்காகக் கடுமையாக உழைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் சீரற்ற நிலைமைகளினால் தன்னூரைவிட்டு இடம் பெயர்ந்து கடைசிக் காலங்களைக் கொழும்பில் வீணே கழிக்க வேண்டியதாயிற்று. நாம் சந்திக்கும்போது இந் நிலையைப் பற்றி அடிக்கடி கூறுவர். அந்திய காலங்களில் கொடிய அஸ்மா நோயினால் மிகவும் அவதிப்பட்டு 15-09-2005இல் யார்க்கரு விநாயாகர் அடி சேர்ந்தார்.

அதிபரின் பாரியார் எனது தாயாருடன் கட்டைவேலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் ஒன்றாகப் படித்ததாக அடிக்கடி நினைவு கூருவார். இவ்வாறான நெருக்கங்கள் என்னை அன்னாரின் குடும்பத்துடன் மிகவும் நெருங்க வைத்துவிட்டன.

இப்படியான உயர் குணம் படைத்த அதிபரைக் கடைசிக் காலங்களில் சந்திக்கக் கொடுத்து வைக்கவில்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யார்க்கரு விநாயகப் பெருமானைத் துதிப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி

**DR த. கதிரவேற்பிள்ளை**
(கால்நடை வைத்தியர்)
இளைப்பாறிய பணிப்பாளர்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகமில்லா அன்பனின் ஆதங்கம்

இறை சிந்தையும் உள்ளத்தெளிவும் மனத்திடமும் கொண்ட மு.வே அவர்கள் அமரர் ஆகிவிட்டார் என்ற செய்தி என்னைப் பெரும் துயரில் ஆழ்த்தி விட்டது. அவரது உள்ளத் தூய்மைக்கு சான்று ஒன்று போதும்.

1995ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாள்,

அன்று யாழ் மாவட்டத்தில் இருந்து **"ஆமி உள்ளே வந்து விட்டான். எல்லோரும் வெளியேறுங்கள்"** என்ற அறிவித்தலைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்தின் அனைத்துத் திக்கிலிருந்தும் மக்கள் உடுத்த உடுப்போடும் கையில் அகப்பட்டதுடனும் இடம்பெயர்ந்து ஓடி வந்தார்கள். தென்மராட்சி வடமராட்சிப் பகுதியை நோக்கி மக்கள் வரும்போது வழியில் அகப்பட்டு நசியுண்டு, தந்தையை - குழந்தையை - கணவனை - மனைவியை என்று தவறவிட்டும் மரணப்படுக்கையில் விட்டும் எங்கெங்கோ ஓடினார்கள்.

இந்த வகையில் நாள்முழுவதும் நடந்தும் மழையில் நனைந்தும் ஒட்டி உலர்ந்து வாடிவதங்கி வந்த மக்களை வடமராட்சி சாவகச்சேரி வீதியின் யார்க்கரை ஆலயத்தின் முன்றலில் நின்ற வயோதிபர் ஒருவர் வரவேற்று இருக்க இடமும் கொடுத்து களைத்த உடலுக்குச் சுடச்சுட தேநீரும் கொடுத்து அன்று உயிர் கொடுத்த உத்தமன் தான் இந்த **'மு.வே'** என்னும் முருகேசு வேலுப்பிள்ளை.

இவ்வாறு தவித்து வந்தவர்களில் நானும் ஒருவன். அப்பெரியவர் அவ்வூர் மக்களுடன் சேர்ந்து ஒரு கிழமைக்கும் மேலாக செய்த அறப்பணியை எண்ணும் போது உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது. இந்த நிகழ்ச்சியின் பின்னர் தான் அப்பெரியவர் பற்றி நான் விசாரித்து அறிந்து அவருடன் தொடர்பினை ஏற்படுத்தினேன்.

அவ்வூர் மக்களும் அவர்கள் அவர் மீது கொண்ட நம்பிக்கையும் சொல்லில் அடக்க முடியாதவை. அவர் தான் அவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை அக்காலப்பகுதியில் முன்னின்று நடத்தியவர் என்பதையும் அம் மகத்தான சேவையையும் அவர் தன் கருணைச் செயற்பாட்டையும் அறிந்து கொண்டேன். அவரது இவ்அரும்பணியை நான் எண்ணாத நாளில்லை.

அவருக்காக உதவிய அவர் சேவைக்கு உறுதுணையாய் நின்ற அவ்வூர் மக்களையும் நான் என்றும் நினைவு கூர்வேன். அன்னாரின் மரணச் செய்தியை பத்திரிகையின் மூலம் அறிந்து கொண்டேன். அவரது ஆன்மா இறைபதம் சேரவேண்டி பிரார்த்திக்கும்,

**இடம்பெயர்ந்து வாழும் அன்பன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிதமாக இனிய மொழிபேசும்
## எங்கள் சித்தப்பாவின்
## நீங்காத நினைவலைகள்....

சின்ன வயதினிலே 'சித்தப்பா' என்று சொல்லி பழகிய சில நாட்களில் பாசத்தின் பரிவைக் கண்டோம். கோல நிலவினிலே குளிர்த் தென்றலிலே முற்றத்தில் வீற்றிருந்து முறையாக கதைகள் பல கேட்ட காலங்களை அசைபோட்டுப் பார்க்கின்றோம் நாம் (பெறாமக்கள்).

உங்கள் அன்புச் செல்வங்கள் அதாவது எங்கள் உடன்பிறவாச் சகோதரர்கள் (இளங்கோ, இந்திரா, செழியன்) எம்முடன் கூடிக்குலாவி, பேசிப்பழகி மகிழ்ந்திருந்த வேளைகளைப் பார்த்து பிரமித்துப்போய் நீங்கள் ரசித்த சந்தர்ப்பங்கள் எம் மனதில் இன்றும் பசுமையாக உள்ளன. அன்று, கட்டுக்கெலியாவில் கல்வி புகட்டும் ஆசானாய் அருமை மனைவியுடனும் ஆசைக் குழந்தை இளங்கோவுடனும் நீங்கள் இனிதே வாழ்ந்திருந்த சமயத்தில் உங்கள் சகோதரியுடன் எமது அன்பு மாமியுடன் உங்கள் பெறாமகள் (பபா) உங்களைப் பார்க்கவென ஓடோடி வந்தாளே. வந்தவர்களை வரவேற்று அன்பாக அரவணைத்த அக்காலம் நெஞ்சை விட்டகலா நினைவாக நிழலாடுகிறதே சித்தப்பா. அத்துடன் நீங்கள் எனக்கு (பபா) அன்பாக வாங்கிக்கொடுத்த அழகான சட்டையையும் பாதணிகளையும் எங்ஙனம் நான் மறப்பேன்?

அவ்வாறு நிலையாக நின்ற நல்லதொரு உறவுப்பாலம் திடீரென சிறிதுகாலம் மறைந்துவிட்டது. காலத்தின் கோலத்தினால் எம்மிடையே தொடர்புகள் அற்றுப்போன நிலையொன்று ஏற்பட்டது. சில காலத்தின் பின், முன்பு பழகிய காலங்களில் எம்மில் விதைத்த பாசம் மீண்டும் தொடரும் வேளை வந்தது. அதனைத் தொடர்ந்து கொழும்பில் எம் அன்னையுடன் நாமிருந்த வேளை எம் மனைக்கு வருகைதந்து அன்புடன் அளவளாவியதை எம்மால் மறக்க முடியுமா? "நான் இங்கு முதலே வந்திருக்க வேண்டும். வந்திருக்க வேண்டிய நேரத்தைத் தப்ப விட்டுவிட்டேன்" என்று நீங்கள் மனம் வருந்திக் கூறியதை நினைக்க நினைக்க நெஞ்சம் நெகிழ்கின்றது.

எமது தந்தை மறைந்த துயர் நீங்குமுன்னே எம் அன்னையையும் இழந்த அதிர்ச்சியிலிருந்த எங்களுக்கு ஆறுதல் அளித்து, அறிவுரைகள் வழங்கி வழிகாட்டி, அரவணைத்தீர்களே. இந்நிலையை நீடிக்கவிடாமல் பொல்லாத காலனவன் உங்கள் இன்னுயிரைப் பறித்துச் சென்றுவிட்டானே. சித்தப்பா! நெஞ்சம் குமுறுகின்றது. நிலைதடுமாறுகின்றது! கண்கள் குளமாகின்றன!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா அசைய மறுக்கின்றது!!! துன்பக் காடுகளையும், துயர் மேடுகளையும் கடந்துவந்த உங்களுக்கு காலனின் கதவைக் கடக்க முடியவில்லையா? அல்லது முயன்றும் முடியவில்லையா சித்தப்பா! எங்கள் அன்னையும் தந்தையும் இல்லாக் குறையை நிவர்த்திக்க வந்திட்டார் சித்தப்பா என்று ஆறுதலடைந்திருந்தோமே. ஆறுதலுக்கு ஆயிரம் உறவு இருந்தென்ன? தனிமைக்குத் துணையறியோம். தயங்கும் இதயங்களுக்கு ஏது சொல்வோம்?

நல்லவராய் இவ்வுலகில் வாழ்ந்திடல் வேண்டுமென்று வல்லவர்கள் சொல்லிவைத்த வாக்குரையை மனதிருத்தி சைவசமயப்பற்றும் இல்லறப் பண்பும் மிக்கவராய் வாழ்ந்தீர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, உறவுகளுக் கெல்லாம் சிகரமென இருந்து சீரான வழிகாட்டிய சித்தப்பாவை எப்பிறப்பில் காண்போம் இனி? எங்கள் வாழ்வு உள்ளவரை உங்கள் நினைவு எங்களுடனிருக்கும். எம்மிதயங்களில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் கலையாத உங்கள் நினைவுகள் நிழலாட, உதிரும் கண்ணீர்ப் பூக்களால் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்காத் துயருடன்,
உங்கள் பெறாமக்கள்

**திரவியம், பபா, பேபி,**
**சறோ, தவேந்திரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.வே. யின் நீங்காத நினைவுகள்

1980 இன் நடுப்பகுதி
ஆசிரியர் கலாசாலை கற்பித்தற் பயிற்சிக்காக
யார்க்கரு விநாயகர் வித்தியாசாலையிற் கடமையேற்றபோது
அங்கு அதிபராக மு.வே
அதற்கு முன்னர் கேள்விப்பட்டது மட்டுந்தான்
அன்று நேரிற் தரிசனம்; அன்று ஆரம்பமான எமது உறவு
நாளாக ஆக ஆல விருட்சமாகி
அதிபர் - ஆசிரியர் உறவு
'தம்பி' என நெருக்கமாகி
தம்பி, மகள், பிள்ளைகள் என மிகநெருக்கமானது
குடும்ப நிகழ்வுகள்,
இந்திரா திருமணம்
தனது மணிவிழா என
அனைத்திலும் எனக்கும் முதன்மை கிடைத்தது
எனது மணவாழ்க்கையையும் முன்னின்று நடத்தி
வாழ்த்துரைத்த அந்த நினைவுகள்
வாழ்ந்த நாட்களில்,
தமிழ்மொழி, இலக்கியம், சைவம், கற்பித்தற்பணி
பாடசாலைகளின் தலைமைப் பொறுப்புக்கள்,
கிராமோதயம், சமாதான சபையெனச் சமூகப்பணி
யார்க்கரு ஆலயத்தின் திருப்பணி எனப்
பலபணி நீண்டன, யதார்த்தம் பேசியதால் பிரிந்த
நண்பர்கள், உறவுகளுக்காகக் கலங்கிய அந்த நாட்கள்
உறவுகள், இடர்ப்பட்ட வேளை
ஓடிச்சென்று உதவிய பண்பு
பின்னாளில், நோயுற்ற வேளையிலும் எனைக்கண்டு
மகிழ்ந்து, கரம்பற்றி, அருகிருத்தி, அளவளாவி
எனது மனைவி பிள்ளைகள் பற்றி விசாரித்து
மூச்சிழைக்க தளர்நடையுடன்
காலி வீதிவரை வந்து வழியனுப்பிய அந்த நாட்கள்
நெஞ்சம் கனக்குதய்யா தொடர முடியவில்லை
என்றும் உன் நினைவுகளுடன்

**ராஜேந்திரன் குடும்பத்தினர்** (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
பொன் கந்தையா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1952களில் உங்கள் அப்பா

அப்பா முருகேசு வேலுப்பிள்ளை கனதரா கட்டுக்கெலியாவ மு. வித்தியாலயத்தில் 1952-07-02 தொடக்கம் 1956-07-01 வரையும் அதிபராகக் கடமை ஆற்றியுள்ளார்.

திருகோணமலைப் பாதையில் சீப்புக்குளம் என்னும் இடத்தில் இருந்து, கனதரா கட்டுகெலியாவிற்கு 7 மைல் தூரம் இருக்கின்றது. இந்த 7 மைல் தூரத்தையும் நடந்து அல்லது மாட்டு வண்டியில் சென்று தான் அக்காலத்தில் சென்று சேவை புரிந்தார். பாதை மிகவும் அடர்ந்த காட்டு மிருகங்கள் நிறைந்த காடாகத்தான் இருந்தது. யானைகள் எந்த நேரமும் நின்று கொண்டிருக்கும். கடிதங்கள் வருவதில்லை. இகலகம என்றும் ஊருக்குச் சென்றுதான் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அப்பா சேவை செய்யும்போது பள்ளிக்கூடமென்ற நிரந்தரக் கட்டிடம் ஒன்றும் இருக்கவில்லை. தற்காலிகமாக ஓலைக் குடிசையினால் கட்டப்பட்ட கட்டிடத்திலேயே கடமையை மேற்கொண்டார். பள்ளிக்கூடம் உருவாவ தற்கும், முன்னேற்றப் பாதையில் செல்வதற்கும், மிகவும் கஷ்டப்பட்டு பாடுபட்டு உழைத்தவர்களுள் அப்பாவும் ஒருவர். பாடசாலையில் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்தார். தனிமையில் நின்று கிணறு தோண்டினார்.

அக்காலத்தில் அப்பாவுடன் சேவை செய்த எப்பாவளயைச் சேர்ந்த செனவிரட்ண என்னும் சிங்கள ஆசிரியரும் கடமை செய்தார். சிங்களம் தெரியாமலும், செனவிரட்ண ஆசிரியருக்கு தமிழ் தெரியாமலும் இருந்ததால் இரண்டு பேரும் கற்றுக் கொண்டார்கள்.

அப்பா கணிதத்தில் மிகவும் திறமைசாலியாக இருந்தார். இதனால் அநுராதபுர மாவட்டத்தில் கணித போதனா ஆசிரியராகவும் கடமை புரிந்தார்.

காடாக இருந்த தோட்டத்தில் வளம் கொழிக்கச் செய்தார். காய்கறி வகைகளை எல்லா ஊர்மக்களுக்கும், கொடுத்து உதவி புரிந்தார். அப்பா படிப்பித்தவர்களுள் பலர் தற்போது ஆசிரியராகவும், அதிபராகவும், மற்றும் அரசாங்கசேவை செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு சிலர் பென்சனாகி விட்டார்கள். சிலர் காலஞ்சென்றும் விட்டார்கள். ஆசிரியர்கள் 10 பேர் அளவில் இருக்கிறார்கள்.

அப்பா கட்டுக்கெலியாவ பாடசாலையில் மாறிச் சென்று பின்னர் ஒரு முறை அப்பாவின் சகோதரனின் மகள் கந்தசாமி ஆசிரியரைக் கூட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தார். கந்தசாமி மிஸ்ஸிடம் படித்த எனது மகள் எஸ். பர்லியா அதே பாடசாலையில் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியையாகக் கடமை ஆற்றுகிறார்.

அப்பாவுக்கு தெரிந்த மிகவும் நெருங்கிய நண்பர்கள் சேகு முஹம்மது, எனது தம்பி அப்துல் மஜீது (கோயா), எனது தம்பி றசாக் ஆசிரியர், என்.சமது, எஸ். சம்சுதீன், முஸ்தபா ஆசிரியர், யூசுப் ஆசிரியர், சாஹிது ஆசிரியர், சுலைமான் ஆசிரியர், அமான் ஆகியோர்.

நோன்பு முடிந்த பின்பு நாங்கள் அங்கு கட்டாயம் உங்கள் எல்லோரையும் பார்ப்பதற்கு வர உத்தேசித்துள்ளேன். என்னுடன் எனது தம்பி ரசாக் ஆசிரியரும் வருவார். இத்துடன் முடிக்கிறேன்.

இப்படிக்கு
உங்கள் அச்சா மாமா
**E. சேகு முஹம்மது**

E. சேகு முஹம்மது
அ/கனதரா கட்டுகெலியாவ
இகலகம
அனுராதபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்துணையும் கல்லாத லாறு

"எட தம்பி லகிபாகம் எண்டால் என்னடா?"

மார்கழி மாதம். திருவெம்பாவைக் காலம். அதிகாலை நல்ல குளிர். மாணிக்கப் பிள்ளையார் ஆலயம். திருவெம்பாவைப் பூசை எழுதருளப் பெற்றது. அவரவர் தங்கள் சோலிகளை நினைத்துக் கொண்டு விரைவாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். சிலர் வரிசையில் நின்று கோயிற் பிரசாதம் வேண்டிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கோயில் வாசலில் ஒருவர் கழுத்தை கம்பளித் துண்டு சுற்றியிருந்தது. அது குளிருக்கு கையில் ஒரு கம்பு வயது போய்விட்டது என்பதைக் காட்ட சற்று உயரம் குறைவு. வேட்டி சால்வை. தமிழ்ப்பழம் முதல் நாள் தமிழ்ச் சங்கத்தில் பேசப்பட்ட தலைப்பு. 'லகிபாகம்' அவருக்கு அச் சொற் பிரயோகம் ஏதோ செய்திருக்கிறது. அது இரவு முழுவது அவரைக் குடைந்து கொண்டிருந்திருக்கும். விடிந்தும் அது தொடர்ந்திருக்கு. என்னைக் கண்டதும் கேட்டார்.

தெரியாது மாஸ்டர்; ஏன் என்ன சங்கதி என்றேன்.

"நடநாய்" என்றார்.

கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லாததால் பண்டிதர் பாணியில் திட்டுகிறார் என நினைத்து, அது மாஸ்டர் முன்னிலை ஏவல், ஒருமை, வினை பகாப்பதம், வினையடி என்று சொல்லி சமாளிக்கப் பார்த்தேன்.

முன்னிலை ஏவல் நாய்க்கு வருமோ? அது அஃறிணை அல்லவா? இப்ப மிருகங்களும் கதைக்குதாமே?

அவர்:- எடபோ அப்பிடியில்லை. லகி என்றால் என்ன? பாகம் என்றால் என்ன? உனக்குத் தெரியுமோ? நடவா மடிசீ விடுகூ..... இதிலை எதுக்கை "லகியைப்" போட போறாய்.

இப்படிக் கிண்டல் செய்தார். அவர் தான் ஆசிரியர் வேலுப்பிள்ளை, பண்டிதர் வீரகத்தியின் வழித்தோன்றல். கிண்டல் செய்வதற்கும் மெத்தப் படிக்க வேண்டும்.

எங்கே கண்டாலும் "இங்கை நில் ஒரு கதை" என்று கூப்பிட்டு இப்போ தமிழ்படும் பாட்டைப் பற்றிக் கூறிக் கவலைப்படுவார். அதுக்காக எல்லோரும் தமிழைப் படிக்க வேண்டும் என்று கூறுவார். அப்படி கூறிவிட்டுப் போகாது தானே இறக்குமட்டும் தமிழ் படித்தார். தினமும் தமிழ்சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்திற்கு விஜயம் செய்தார். அறிவுள்ளவர்கள் தான் அறிவைத் தேடுவார்கள்.

**"அறிதேறு அறியாமை கண்டற்று"**

ஆசிரியர் வேலுப்பிள்ளை அறிஞரான படியால் அறிவைத் தேடினார்.

**"யாதானு நாடாமா லூராமா வெள்............**
**சாந்துணையும் கல்லாத லாறு"**

அவர் வள்ளுவர் சொன்னது போல் இறக்கு மட்டும் கற்றார்.

நான் கற்றலைனாயினும் கேட்டேன் அவரிடம்

அறிஞர் வேலுப்பிள்ளை இன்று அமரராகி விட்டார்.

**சிவராசசிங்கம் கந்தசாமி**
தபாலதிபர்
(கொழும்பு பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு. முருகேசு வேலுப்பிள்ளை

வடமராட்சியில் கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஓய்வு பெற்ற அதிபர் அமரர் திரு.முருகேசு வேலுப்பிள்ளை ஒரு சிறந்த கடமை வீரராகவும், பொதுக் கலைத்துறை, ஆக்மீகத்துறைகளில் தனது பெரும் பகுதி நேரத்தை முழுமனதுடன் செலவிட்ட உத்தமராகவும் செயற்பட்டார். இவர் மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் எதுவாக இருப்பினும் அவற்றை முழு மனதுடனும் துணிவுடனும் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவராக விளங்கினார். பிறருக்குத் தன்னாலான உதவிகள் செய்தல், விருந்தோம்புதல் போன்ற நற்பண்புகளும் இவரிடம் காணக்கூடியதாக இருந்தது.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்'' என்பதற்கிணங்க அன்னாரின் புதல்வர்களான வைத்திய கலாநிதிகள் - இளங்கோவனும் இளஞ்செழியனும் புதல்வியான பட்டதாரி ஆசிரியை திருமதி.இந்திராணி விமலேஸ்வரனும் தந்தையின் வழிநின்று நற்பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது பாரியாருக்கும், பிள்ளைகளுக்கும், மருமக்கள் பேரப்பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.தங்கராசா**
ஓய்வு பெற்ற
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அனுபவம்

வாத்தியார் அவர் என்றும் வாத்தியார் தான்
வாத்தியார் என்றுதான் நான் அவரை அழைப்பேன்
அவரோ தம்பி என்பார்! அதில் ஒரு கனிவிருக்கும்
கோபத்திலும் அடேதம்பி என்றுதான் கோபப்படுவார்
அவரின் ஆசிரியப் பண்பு அது

(ஒரு நினைவு)

1987 நவம்பர் ஆறாம் திகதி கொழும்பிலிருந்து வாத்தியார்
பரந்தன் வந்தார். கொட்டும்மழை,
வாத்தியாரோ ஊருக்குப் போகவேணும்..........
வாத்தியாருடன் சயிக்கிளில், குறுக்குப் பாதைகளால்
ஊருக்குச் சென்றோம். செம்பியன் பற்றில்
வாத்தியாருக்கு இளுப்பு தொடங்கியது.
ஒருவீட்டில் சுடுநீர் வாங்கிக் கொடுத்தேன்
இரவு ஒன்பது மணி வாத்தியார் வீடு வந்தோம்
அக்கா வாத்தியாரை ஒப்படைக்கின்றேன் என்று கூறிச்சென்றேன்
மறுநாள் காலையில் நான் என் காலை இழந்தேன்
ஆஸ்பத்திரி வந்த வாத்தியார் என்னால் தானே உனக்கு இந்த நிலை
என்று தன்தலையில் அடித்த காட்சி இன்னும் என்
மனத்திரையில் ஓடுகின்றது. நன்றி மறவாத உத்தமன் அவர்
கடவுள் தரஇருக்கும் உயிர்த்தெழுதலின் போது
மீண்டும் வாத்தியாரைக் கண்டு, வாத்தியார் என்று
வாயாரக் கூப்பிடும் நாள்வரும்
என்ற நம்பிக்கையை என்கடவுள் எனக்குத் தந்துள்ளார்
காத்திருக்கின்றேன் என் வாத்தியாரைக் காண்பதற்கு!

என்றும் அன்புடன்
**பரஞ்சோதி நடேசு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாய நம

# உலக சைவப் பேரவை

## இலங்கைக் கிளை

# WORLD SAIVA COUNCIL

## SRI LANKA BRANCH

9, JAYA ROAD, COLOMBO - 04.
TEL: 2582139, 2593997.

---

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டு ஈழத்தின் பெரும் பகுதிகளில் கற்பித்தல் தொழில் மூலம் பரவலாகப் பெரும் பணியாற்றியவர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் தற்போது சில ஆண்டுகளாக கொழும்பில் பிள்ளைகளுடன் வாழ்ந்தவர். இந்த நிலையிலேயே இவருடைய இறப்பு நிகழ்வும் நடந்துவிட்டது. கரவெட்டியில் பெருமையும் மதிப்பும், பண்பாடும் கொண்ட குடும்பம் இவருடையதாகும். யாக்கரை பிள்ளை யாருடன் நெருங்கிய தொடர்புடையவர். இங்கு நடைபெறும் ஆலய பணிகளில் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி ஆனைமுகன் அருளை பெற்றவர்கள். சமயப் பணி, சமூகப்பணி, தமிழ்ப்பணி எனப் பணியை விரிவுபடுத்தி வாழ்வில் அதன் சிறப்பை அனுபவித்து மகிழ்ந்தவர். கொழும்பு தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பு வைத்திருந்தவர். வாழ்ந்த காலத்தில் பலரின் கல்வி வளம் உயர்வதற்கு முன்னின்று உழைத்தவர். அமரர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்களின் ஆத்மசாந்தியை பிரார்த்தித்து யாக்கரை பிள்ளையார் திருவடிகளில் அன்னார் என்றும் இன்புற்று வாழப் பிரார்த்திப்போமாக. அன்னாரின் அந்தியேட்டி தின வெளியீடாக பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் "காதலியாற்றுப்படை" பதிப்பித்து வெளி யிடும் பிள்ளைகளது சிந்தனை வளத்தை மனதாரப் பாராட்டுகின்றேன்.

**மு. கதிர்காமநாதன்** - JP
செயலாளர்

உலக சைவப்பேரவை
இலங்கைக் கிளை
09.10.2005.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் பா

வாத்தியார் என்றே அன்பாக
வாய்நிறைய நான் அழைத்தவரே
வாழும் காலம் இனிய நட்பை
வழங்கிய உம்மை எப்படி மறப்பேன்

நல்லது கெட்டது என்வாழ்வில்
நீர் இல்லாது நடந்ததில்லை
உதவும் மனமே உமக்கிங்கே
உன்னத பெயரை தந்ததைய்யா

சாமியார் என்றே இனிப்பாக
பாசம் கொட்டி எனை அழைக்க
பாழும் இந்த பூமியிலே
யார் வருவார் இனி வாத்தியாரே

வள்ளிப்பிள்ளை இனியாளை
இல்லற வாழ்வில் துணைகொண்டாய்
முக்கனி பிள்ளை செல்வம் கண்டு
மூவர்க்கும் உயர் கல்வி தந்தாய்

கல்விச்சாலை பல சென்றே
உன்னத அறிவை பிறர்க்களித்தீர்
கடின உழைப்பின் பெறுபேறாய்
அதிபராக உயர்ந்து வாழ்ந்தாய்

இதயம் பிரிவில் தவித்தாலும்
இயற்கையின் நியதியை யார்வெல்வார்
இனிய உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனிடம் நான் வேண்டி நிற்பேன்.

**சிவகுரு குடும்பம்**
கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உந்தன் நினைவு சொல்லில் அடங்கிடுமோ

திருமகளைப் பெற்றெமக்கு
மருமகளாய் உவந்தளித்த
பெருமகனே தமிழ் வளர்த்த
தலை மகனே எமைப்பிரிந்தீர்
குலப் பெருமை தனைக் காத்தீர்
சமூக சேவை பல புரிந்தீர்
குலம் வாழ இனிய தொண்டு செய்தவரே
நலம் காப்பீர் உம்பருலகில்

கரவையூர் பூம்புகார் பதி
தந்த கனவானே
பிரிந்தீரோ எம்மைவிட்டு
புகுந்தீரோ வானுலகு
ஆசிரியப் பணியினிலே அதிபராயிருந்து
அருந்தொண்டு புரிந்தவரே
பேசி முடிந்திடுமோ உந்தன்
மாணாக்கர் பெருமையெல்லாம்

சொல்லில் அடங்கிடுமோ நீர்
செய்த சேவையெல்லாம்
செல்வாக்காய் இருந்தவரே
சொல்லாமல் சென்றதென்ன
நில்லாதெம் நெடுமூச்சு
நின்தன் நினைவினிலே
பொல்லாத காலனவன்
பெரும் பிழைதான் செய்தானோ

யார்க்கரை விநாயகர்
அறங்காவலராய் இருந்து
போக்கும் பொழுதெல்லாம்
அறப்பணிகள் செய்தீரே
விக்ன விநாயகர் தன்
அறங்காவல் சபை அமைத்து
மிக்குள்ள திருப்பணிகள் தொடர
வழி செய்தீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு மனை செல்வம்
　　மக்களுக்குச் சேர்த்து வைத்தீர்
பாடு பட்டு பிள்ளைகளை
　　படிக்கவைத்துப் புகழ் சேர்த்தீர்
ஊரைவிட்டுப் பிரிந்து வந்து
　　உத்தமராய் வாழ்ந்திருந்தீர்
சேர்த்த புகழ் போதுமென்று எமைத்
　　தவிக்க விட்டுச் சென்றீரோ

கவிதைகள் பாடி வைத்தீர்
　　கல்வெட்டும் பாடி வைத்தீர்
புரியாத போதினிலே
　　புரியவைத்துப் பெருமை தந்தீர்
அறியாத போதினிலே
　　அறியவைத்து ஒளிதந்தீர்
மறந்திடுமோ நின்சேவை
　　இவ்வுலகம் உள்ளவரை

அரசியலும் அறிந்திருந்தீர்
　　அனைவருக்கும் உதவி செய்தீர்
பெருமையாய்ப் பேசிடுவர்
　　பொதுமக்கள் சேவைகளை
இவ்வுலகிற் செய்த
　　சேவையெல்லாம் போதுமென்று
அவ்வுலகில் சேவை செய்ய
　　அழைக்காமல் சென்றீரோ

உம் பிரிவால் துயருறும்
**ந.விசுவநாதபிள்ளை குடும்பத்தினர்**
மொன்றியல்
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நிறைந்த மாமா

மாமாவின் இழப்பு மாறாத துன்பமாக இதயத்தை வாட்டுகின்றது. இயற்கையின் நியதி மரணம். "என்புக்கும் தசைக்கும் மருத்துவம் கண்டேன் இதற்கொரு மருந்தை கண்டேனா?" என்ற கவிஞர் கண்ணதாசனின் வினா எனக்கும் மனத்திரையில் வந்து செல்கின்றது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார் வள்ளுவர். இப் பொய்யா மொழிக்கொப்ப வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து புகழ் பரப்ப, மாமா தோன்றினார். விவேகமும் துணிவும் அவரின் உடன் பிறப்புக்களாகும். மாமாவின் வாழ்வில் பல சோதனைகளும் சவால்களும் மலை எனத் திரண்டு வந்ததுண்டு. தனக்கே உரிய மன உறுதியுடனும் ஆற்றலுடனும் அவற்றை எதிர்த்து நின்று வெற்றிவாகை சூடினார். கல்விப் பணியிலும் சமூகப் பணியிலும் உயர்ந்த பெருவிருட்சமாக நின்றார். அவரைச் சுற்றி பல கொடிகள் படர்ந்து வளர்ந்தன. அவை எல்லாம் இன்று நிமிர்ந்து, உயர்ந்து, நிறைந்து "மு.வே" என்ற நாம அட்சரங்களை உச்சரித்துக் கொண்டே உள்ளன.

மாமாவை பூவுலகிற்குத் தந்த யார்க்கரு விநாயகப் பெருமான், அவரை மீள அழைத்துத் தன் பாதாரவிந்தங்களில் அமர்த்திக் கொண்டார்.

எழுத நினைக்கும் விதியின் கை மேலும் மேலும் எழுதிச் செல்லும். அழுதாலும் தொழுதாலும் அதில் ஒரு எழுத்தும் அழியாது என்ற உண்மையை உணர்கிறேன்.

மாமாவின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றேன்.

மருமகன்<br>
**சு. ஆனந்தசிவம் (அதிபர்)**<br>
கிளி/ஸ்கந்தபுரம் இல.2,<br>
அ.த.க.பாடசாலை<br>
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Few Drops From Memory

It is with sorrow that I write few lines about late M.Velupillai retired Principal who passed away with his illness which be fought with incredible courage and fortitude.

His kindness and compassion was boundless. He was deeply religious and worshiped YARKKARU Pillaiyar with his heart, min and sprit.

Thought his demise has created a void in the family. I am certain that he wanted to continue his blessings from high above.

May his soul rest in peace.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் - குறள்

**Dr. P. Sivapadasundaram**
B-8, Anderson Flat,
Park Road,
Colombo - 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
## வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

அமரர் முருகேசு வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த ஆசிரியப் பெருந்தகை ஆவார். இவர் கல்வி கற்பிக்கும் காலங்களில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற குறிக்கோளுக்கமையவே சேவை செய்து வந்துள்ளார். ஏழ்மை நிலையில் இருக்கும் திறமையான மாணவர்களை தெரிவு செய்து பல உதவிகளை இவர் புரிந்துள்ளார். இவரின் வழிநடத்தலினால் இன்று நல்ல நிலையில் இருப்பவர்கள் பலர். அவர்களில் நானும் ஒருவன். இதை ஊர் அறியும்.

இவர் எனக்கு மாமா உறவாவார். சிறு வயதில் பெற்றோரை இழந்த எம் நல்வாழ்விற்கு பல உதவிகள் புரிந்துள்ளார். எனது வாழ்வின் வெற்றி களைக் கண்டு மனம் மகிழ்ந்தவர்களில் இவரும் ஒருவர்.

**"மனிதன் மரணமடையலாம் ஆனால்**
**மனித தன்மைகள் மாறாது"**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு இறைவன் மன நிம்மதியை அளிப்பதோடு இவரின் ஆத்மா எல்லாம் வல்ல யார்க்கருவான் பாதார வித்தங்களில் சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

Dr. N. **சிவசுப்பிரமணியம்**
வாணி வைத்திய நிலையம்
முல்லை வீதி
விசுவமடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. வே

# நினைவின் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

"நன்றிப் பயன் தூக்கி வாழ்தல் நனி இனிதே"

அன்பையும், பண்பையும் ஒருங்கு சேர்த்து இவ்வுலகில் எம்மை வாழ்வாங்கு வாழவைத்த எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும், மலர் வளையம் அனுப்பியவர்களுக்கும், தந்தி, கடிதம், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களுக்கும், றோயல் மருத்துவமனை டாக்டர்களுக்கும், தாதிமார்களுக்கும், ஊழியர்களுக்கும், இந்நூலை கணணி வடிவமைத்த குளோபல் சகோதரர்களுக்கும் அட்டைப் படம் தந்துதவிய நண்பன் க. குமரன் புத்தக இல்லத்தினருக்கும் அச்சில் பதிப்பித்து உதவிய நண்பன் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் எமது துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறிய உற்றார் உறவினர்களுக்கும், தோள் கொடுத்து துணைநின்ற நண்பர்கள் அனைவருக்கும் எமது அழைப்பை ஏற்று வருகைதந்து அந்தியேட்டிக் கிரிகைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் மேலும் எமக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் நல்லுதவியும் செய்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.வே இன் நினைவாக

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின்

# காதலியாற்றுப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேராசிரியர் கணபதிப்பிள்ளையின்

### காதலியாற்றுப்படை காட்டும்

# யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள்

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழிலே தோன்றிய இலக்கியங்களிலே ஆற்றுப்படை எனும் இலக்கிய வடிவம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. பழந்தமிழ் மக்களின் பண்பாட்டுக் கோலங்களைப் படம் பிடித்துக் காட்டும் மிகச் சிறந்த இலக்கியங்களாக ஆற்றுப்படைகளைக் கொள்ளலாம். ஆற்றுப்படை என்பது **ஆறு + படை** எனப் பிரிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்தல் என்பது பொருள்.

தொல்காப்பியர் பாடாண்திணைக்கு இலக்கணங் கூறுமிடத்துப் பின்வருமாறு கூறுவர்.

> **'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
> **பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
> **சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்'**

(தொல், பொருள்புறத் 36)

ஆற்றுப்படை எனும் இலக்கிய வடிவத்தின் தோற்றத்தினைக் கூறும் இந்நூற்பா அதன் அமைப்பையும் சுட்டி நிற்கின்றது.

பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடு கடாம்) எனும் ஐந்து ஆற்றுப்படைகள் இடம் பெற்றுள்ளமை இவ்விலக்கிய வடிவம் பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துகின்றது எனக் கருதலாம். பழந்தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அரசியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர்களுக்கு 'மூலபண்டாரமாக' விளங்கிய வற்றுள் முற்குறிப்பிட்ட ஆற்றுப் படைகளுக்கும் கணிசமான பங்குண்டு.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை, கட்டுரை, நாடகம், நாவல், மொழி பெயர்ப்பு, ஆராய்ச்சி முதலியவற்றிலே அழியாத புதிய தடங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்தவர். கவிதைத் துறையிலும் தமது ஆற்றலைப் புலப்படுத்தியவர். 'யாப்பறிபுலவனாகத்' திகழ்ந்த இவரின் கவிதைகள் தனித்துவமும் சிறப்பும் வாய்ந்தமை. நெடுங்கவிதைகள் பாடுவதிலே மிகவும் வல்லவராகத் திகழ்ந்தார் என்பதற்கு இவரது 'துவுதும் மலரே' என்னும் நூலும், காதலியாற்றுப்படையும் மிகச்சிறந்த சான்றுகள் எனலாம்.

இவர் காதலியாற்றுப்படையைப் பாடியமைக்குச் சில காரணங்களைச் சுட்டலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் இவருக்கிருந்த பற்றும் ஆர்வமும் ஆற்றலும் முக்கியகாரணமாகலாம். இவர் பழமையில் ஊறிப்புதுமையை அவாவும் பண்பு கொண்டவர். காதலியாற்றுப்படைத் தலைவனைப் பற்றிக் கூறுமிடத்துப் பின்வருமாறு குறிப்பிடுவர்.

> 'பழையன போற்றிப் புதியன வமைக்கும்
> பகுத்தறிவாளன் பாருடைத் தலைவன்'

பேராசிரியர் கணபதிப்பிள்ளை தன்னையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டார் என்பதை மறுப்பது கடினம். பாட்டுடைத் தலைவனின் இருப்பிடம் பற்றிக் குறிப்பிடும் பொழுது தமது இல்லம் அமைந்திருக்கும் இடத்தினைக் குறிப்பிடுவதோடு, அச்சூழலையும் விதந்து பாடுகின்றார்.

வடமராட்சியைத் சேர்ந்த பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் கணபதிப்பிள்ளை மட்டக்களப்பிலே திருமணம் செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமது மனைவியை மனங்கொண்டுதான் இவ்வாற்றுப்படையைப் பாடினாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. 1950ஆம் ஆண்டு இவ்வாற்றுப்படை நூலுருப் பெற்றுள்ளது.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஈழத்தமிழ் மக்களின் பண்பாட்டுக் கோலங்களை அழிந்து போகவிடாது பதிவுசெய்து பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துடையவராகத் திகழ்ந்தார் என்பதை இவரது படைப்புக்கள் புலப்படுத்தி நிற்கின்றன. இவர் நாட்டுப்புறவியலில் அதிக நாட்டம் காட்டியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நவீன இலக்கியங்களில் மாத்திரமன்றிப் பழைய இலக்கிய மரபில் புதிய விடயங்களைச் சொல்ல வேண்டும் என்ற ஆவலும் பேராசிரியர் கணபதிப் பிள்ளையிடம் குடிகொண்டிருந்ததெனலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குப் பொதுவாகவும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாகவும் அமைந்த பண்பாட்டுக் கோலங்களையே பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியாற்றுப்படை காட்டும் பண்பாட்டுக் கோலங்கள் பல இன்று மறைந்து போய்விட்டன. சில காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப மாற்றமடைந் துள்ளன.

காதலியாற்றுப்படை காட்டும் பண்பாட்டுக் கோலங்களைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

- உணவுப் பழக்கம்
- ஆடை அணிகள்
- விளையாட்டுக்கள்
- வழிபாடும் சடங்குகளும்
- நம்பிக்கைகள்
- பொதுவானவை

## உணவுப் பழக்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின், சிறப்பாக வடமராட்சிப் பிரதேசத்தின் உணவுப் பழக்க வழக்கங்களிலே குறிப்பிடத்தக்க சில தனித்தன்மைகள் இருந்தன. காலப் போக்கிலே உணவுப் பழக்கங்களிற் பல மாற்றமடைந்து விட்டன. எனினும் மாறாத சில தன்மைகள் இன்றும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் உணவுப் பழக்க வழக்கங்களை மிகவும் விஸ்தாரமாகவே பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**'விட்டுக் கள்ளினை விளைபதுமெய்து நெல்**
**மாவினிற் சுட்ட வண்புளிச்சப்பமும்'**

'வெள்ளைஅப்பம்' எனக் கூறப்படும் அப்பம் பெரும்பாலும் இன்றும் இப்பகுதியிலேயே புழக்கத்தில் உள்ளது. இவ்வப்பத்தினைத் தயாரிப்ப தற்குப் பனங்கள்ளிலே சிறிது கலந்து மாவினைக் குழைத்து ஊறவைப்பது வழக்கம். மாப்புளிப்பதற்குரிய அமிலம் **"எசன்ஸ்"** கள்ளிலே உண்டு. அப்ப வகையிலே வெள்ளை அப்பம், பால்அப்பம், புளிச்சப்பம், இடியப்பம் எனப் பலவகையுண்டு இவற்றிலே வெள்ளை அப்பத்திற்குப் பேர் போனது இப்பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் வெள்ளை அப்பத்தினையே புளிச்சப்பம் எனக் குறிப்பிட்டுள்ளார் எனக் கருதலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பக தருவாக விளங்கும் பனையிலிருந்து பெறும் உணவு வகைகளையும் காதலியாற்றுப்படை விரிவாகவே பேசு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'பனங்காய்க் களியுடன் சாமை மாக்குழைத்து**
வனைபந்தினைப் போல் நெய்யிற் போட்டுத்
தட்டுத் தட்டாய் சுட்டுமே லெடுத்துச்
சுளகிற் பரப்பி விலையது கூறும்
**கமழ்தரு செம்பனங் காய்ப்பணி யாரமும்'**

பனங்காய்க்களியுடன் சாமை மாவினைக் குழைத்து பனங்காய்ப் பணியாரம் சுடுவதுதான் வழக்கம். இன்று சாமைமாவுக்குப் பதிலாகக் கோதுமை மாவையே பயன்படுத்துகின்றனர். சாமை மாவினிற் சுடும் பனங்காய்ப் பணியாரத்திற்குத் தனித்துவமானதோர் மணமுங் குணமும் உண்டு என்பதை அதைத் தின்று சுவைத்தோர் உணர்வர். இன்றும் யாழ்ப்பாணத்தின் தனித்துவமான அடையாள உணவுப் பண்டங்களில் ஒன்றாக பனங்காய்ப்பணியாரம் பேசப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்திலே பயன்படுத்தப்படும் உணவு வகைகளைப் பற்றிப் பேராசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

**'அருவிலை கொடுத்தே அரக்கு மாந்தும்**
மாந்தர் வாய்க்கு வெங்கறிப்பாக
வளமுற உதவும் வடையின்கடகமும்
முறுக்கு, நல்வாய்ப்பன், மோதகம் இட்டலி
பிட்டுத் தோசை, புகழிடியப்பம்
எள்ளுக் கட்டியும் இடித்து நன்கெடுத்த
நெய்பிழி பாகின் நிகரில் திரணையும்
**பாணிப் பனாட்டும் பகர்பனங்கட்டியும்'**

இவ்வுணவுப் பண்டங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் பொது வானவையாக அமைந்தபோதிலும் சிற்சில வடமராட்சிப் பகுதிக்கே சிறப்புடையவையாகக் கருதப்படுகின்றன. இன்று 'பருத்தித்துறை வடை' என்று உலகமெல்லாம் பேசப்படும் வடைக்கு உண்மையிலே வழங்கிய பெயர் 'கள்ளுவடை' என்பதேயாகும். கள்ளு, சாராயம் குடிக்கும்பொழுது சுவைப்பதற்கு (Taste) ஆகப் பயன்படுத்தப்பட்டமையாலேயே இதற்கு இப்பெயர் உண்டானது. இதனையே மாந்தர்வாய்க்கு 'வெங்கறிப்பாக' என்று பேராசிரியர் குறிப்பிட்டார். இவ்வாறே தோசை, எள்ளுருண்டை, எள்ளுப்பாகு முதலியனவும் வடமராட்சிப் பகுதிக்குரிய சிறப்பான உணவு வகைகளாகக் கருதப்படுகின்றன. இட்டலி, இடியப்பம், பிட்டு, முறுக்கு, வாய்ப்பன், மோதகம் பாணிப் பனாட்டு முதலானவை யாழ்ப்பாணப் பிரதேசம் முழுவதற்கும் பொதுவான உணவுப் பண்டங்களாக விளங்கு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்திலே யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பிரதான உணவாக விளங்கியது பனம்பழம் என்றே கூறப்படுகின்றது. பனை பற்றியும் பனம்பழம் பற்றியும் பல இலக்கியங்களும் தனிப்பாடல்களும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழக்கில் இருந்துள்ளன. ஐரோப்பியர் வருகையையொட்டி ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களினால் பனம்பழத்தின் பயன்பாடு மிக மிகக் குறைந்து விட்டது. குழந்தைகள் பனம்பழம் புசிக்கும் காட்சியைப் பேராசிரியர் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

**'காடியிற் றோய்த்த காழ்பனங் கொட்டையைத்**
தாயார்தங் கையிற் றாவினர் வாங்கி
வண்டியுஞ் சொக்கும் பணங்களி புரள
வண்டினந் தேனை யுண்டல் போலக்
**களியினை மாந்தி' .............**

எமது பண்பாட்டிலே மிகவும் முக்கியமாகவிருந்த இக்காட்சியை இன்று காண்பது கடினம். யாழ்ப்பாணத்தவர்களின் பிரதான குடிவகையாக விளங்கிய கள்ளுப்பற்றிப் பேராசிரியர் பின்வருமாறு விரித்துச் செல்கின்றார்.

**'நரை தோ லியனம் அரையிற் கட்டி**
அதன்கீழ் முட்டி யசைதர விட்டு
மார்போ டணையத் தோலது தூக்கி
உரனுறு தளைநார் காலிணை மாட்டிக்
கால்மடித் துன்னிக் கருநெடும் பனைமிசைப்
பாளை தட்டிப் பார்த்துச் சீவி
ஏர்தரு மூசலோ டியனத் தசையும்
இன்கள் முட்டியோ டிறங்கும் போதின்
அடிமரத் திருந்து நுனிவரை நோக்கி
நாநீ ரூறி யுதடு வருடிப்
பெருமகிழ் வோடு பிளாவை யேந்தி
அருவிலை கொடுத்து நறவினை மாந்திக்
**களிப்புறு மாக்கள் விளிப்புறு கும்பலும்'**

பனைகளில் இருந்து கள்ளினைப் பெறும் காட்சியைப் படம்பிடித்துக் காட்டிய பேராசிரியர் கள்ளை விரும்பியுண்ணும் மக்களின் மனநிலையையும் தெளிவுபடுத்துகின்றார். யாழ்ப்பாணத்து வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த கள்ளினைப் பற்றிப் பல் வேறிடங்களிலும் பேராசிரியர் சுட்டிச் செல்கின்றார்.

அதிகாலையிலே குழந்தைகளுக்கு எண்ணெய் பூசி ஒரு சங்கிலே கள்ளினை விட்டுப் (மேசைக்கரண்டிப் பிரமாணம்) பருக்கி இளவெய்யிலிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்களிலே (ஓலையாற் செய்த சிறுபாய்) கிடத்துவது மிக அண்மைக்காலம் வரை வழக்கில் இருந்தது. இன்று இப்பழக்கம் முற்றாக மறைந்து விட்டது. பேராசிரியர் தமது காதலி ஆற்றுப்படையிலே இக்காட்சியை மிக அழகாகச் சித்திரிக்கின்றார்.

**'பனையின் நறவைப் பச்சிளங் குழவிகள்**
வனைதரு சங்கின் வார்த்துத் தாயர்
பருக்கித் தடுக்கிற் பாங்கொடு வளர்த்தலும்
களிமிக வெய்திக் கால்கை யடித்துக்
தஞ்சிறு கையாற் றடுக்கை ஈர்த்துக்
காற்பெரு விரலைக் கையிற் பற்றி
வாயினுள் வைத்து வளர்பல் குதலை
**இன்புறப் பேசி யிசையொலி பெருக்கி......'**

ஒரு பனையிலிருந்து சேர்த்தெடுத்த தெளிந்த புதிய கள்ளு நோயாளிகளுக்கும் குழந்தைகளுக்கும் நல்லது என்ற நம்பிக்கை கிராமிய மட்டத்திலே இன்றும் நிலவுகின்றது 'உடற்சூட்டுக்கு உடன் கள்ளுப்போல்' என்ற மரபுத்தொடரும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழக்கில் உண்டு என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் அன்றாட உணவு வகைகளையும் அவற்றிற்குப் பயன்படுத்தப்படும் பண்டங்களையும் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

'கொள்ளுங் கடலையு மெள்ளும் பயறும்
பல்வகைத் தானியம் பாங்கொடு கொணர்ந்து'

'கரும்பூ ணுலக்கை கைதனிற் பற்றி
நெல்லுந் தினையு நீள்முறி யொடியலும்
அவலுந் தூளு மசைந்தசைந் திடித்து
கொள்ளை கொள்ளும் வள்ளைப் பாட்டை
இன்னிசை தன்னோ டியம்பிடு மோதையும்'

என்று குறிப்பிடுகின்றார். இன்று உரலிலே இடிக்கும் பழக்கமே மிக அருகிவிட்டது. 'நீள்முறி ஒடியல்' என்பதை இன்றைய தலைமுறையினிற் பலர் அறிய மாட்டார்கள். கிராம மக்களிடையே வழக்கில் இருந்த உணவுப்பழக்க வழக்கங்களையே பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமது காதலியாற்றுப்படையிலே பதிவு செய்து வைத்துள்ளார்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பிரதேச மக்களின், சிறப்பாக வடமராட்சிப் பிரதேச மக்களின் உணவுவகைகளைக் குறிப்பிடும் பேராசிரியர் சோறுகறி பற்றி விரிவாகக் கூறுவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆடை அணிகள்

பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமது காதலி ஆற்றுப்படையிலே யாழ்ப் பாணப் பிரதேச மக்களின் உடை பற்றி விரிவாகக் குறிப்பிடவில்லை என்பதும் மனங்கொள்ளத்தக்கது. ஆங்காங்கே சிறுபான்மையாகவே உடைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். எனினும் பெண்கள் அணியும் ஆபரணங்கள் பற்றி மிகவிரிவாகப் பேசுகின்றார். நீதிமன்றுக்குச் செல்லும் ஆண்களின் உடைபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**'மெய்யதி வழகுற மேலுடை அணிந்து**
**கையதி லதற்கிணைக் கருங்குடை பிடித்துத்**
**தலையுது தன்னிற் தலைப்பாத் தாங்கி'**

ஆண்கள் உடைபற்றி இவ்வாறு கூறிய பேராசிரியர்

**'நிறம்பல தீட்டிய பசும்பொற் சேலை**
**விரும்பி யணிந்த மடவார் குழாத்தின்'**

என்றும்

**'கந்தை உடையினர்**
**குறுக்குக் கட்டினர்**
**சிந்திடு வேர்வையர்**
**ஆசைந்த நடையினர்'**

என்றும் பெண்களின் உடை பற்றிக் குறிப்பிடுகின்றார். இரு வேறு வர்க்கத்தினரின் உடையை ஒரே இலக்கியத்தினுள் அழகாகச் சித்திரிக்க ஆற்றுப்படை கைகொடுத்திருக்கின்றது எனலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பெண்கள் ஒரு காலகட்டத்திலே குறுக்குக் கட்டு கட்டியமையைப் பேராசிரியர் நன்கு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேசப் பெண்கள் அணிந்த ஆபரணங்களைப் பற்றி மிக விஸ்தாரமாகவே இவர் குறிப்பிட்டுள்ளார். திருமணப் பெண்கள் அணிந்து செல்லும் ஆபரணங்கள் பற்றி

**'தலைமேற் சூரிய சந்திரப் பட்டமும்**
**சடைமேல் நாகமும் நலமுற வணிந்து**
**நெற்றியினிட்ட பொட்டு மின்ன**
**................................................**
**செம்பஞ்சணிந்த சேவடி மீமிசை**
**செம்பொற் சிலம்பும் சீறடிச் சரமும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்ணிடை பூட்டியநொய்ம் மேகலையும்
கதிர்முலை மேவிய கதிர்முத் தாரமும்
அருமணி மாலையும் அசையுறீஇக் கறங்க
.......................................
கன்மோதிரமும்'

இவ்வாறு கூறிச் செல்லுகின்றார். யாழ்ப்பாணப் பிரதேசத்திலே இன்றும் திருமணப் பெண்கள் இத்தகைய கோலத்துடன் திகழ்வதைக் காணலாம். பெருமளவுக்கு இன்றுவரை இப்பண்பாடு மாற்றமடையாமலே இருப்பது கவனிப்புக்குரியது.

'நன்னாட் பார்த்துப் பொன்னை உருக்கி
மணவினைக் கென்றே வரைந்திடு தாலியும்
அட்டியல் பதக்கம் பிலாக்கு மூக்குத்தி
பூரானட்டியல் கீச்சுக்கல் அட்டியல்
கடுகுமணிக் கொலிசு கவுத்தோர் காதுப்பூ
வாளி சிமிக்கி வளையல் தோடு
பட்டணங்காப்பு பீலிக்காப்பு
பாதசரமொடு சங்கிலி சிலம்பு
தூங்கு கடுக்கன் நட்டுவக்காலி
ஆரும்பு மணிமுரு கொள்ளைப் பூவும்
ஓட்டிணை மொளிபெறு நுதலணி
அரை ஞாண் கயிறோடு அரை மூடி சலங்கை

மேலே குறிப்பிடும் அணிகலன்களிற் பல இன்று பயன்பாட்டில் இல்லை யென்றே குறிப்பிடலாம். யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வியலிலே ஒருகாலகட்டத்திலே இந்த அணிகலன்கள் பயன்பாட்டில் இருந்தன என்பதை இன்றைய தலைமுறையினர் அறியக் காதலியாற்றுப்படை பெரிதும் உதவுகின்றது.

## விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழக்கில் இருந்த விளையாட்டுக்கள் பலவற்றை பேராசிரியர் தமது காதலியாற்றுப் படையிலே சித்திரமாகத் தீட்டியுள்ளார். இவர் காதலியாற்றுப் படையிலே காட்டும் விளையாட்டுக் களை இரண்டு வகையாகப் பகுத்து நோக்கலாம்.

ஒன்று: குழந்தைகள் விளையாடும் விளையாட்டுக்கள்
இரண்டு: பெரியவர்கள் விளையாடும் விளையாட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழந்தைகள் விளையாடும் விளையாட்டுக்கள்:**

**'கிந்தியடித்தும் வளைய முருட்டியும்**
**தட்டுப் பாய்ந்தும் கிட்டி அடித்தும்**
**மாவின் கொட்டை மகிழ்வொடு போட்டு'**

எனத் தொடங்கும் பேராசிரியர் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுக் களைச் சற்று விரிவாகவே சொல்லிச் செல்கின்றார்.

**'சிற்றி லிழைத்துச் சிறுசோறாக்கி**
**.............................................**
**களிமட் பாவை அழகுறச் செய்து**
**பூவினைச் சூட்டித் துகிலினை உடுத்திச்**
**சீராட்டி யோராட்டும் சிறுமிகள் குழுவும்'**

குழந்தைகள் சிற்றிலமைத்துச் சிறுசோறு அட்டு விளையாடும் வழக்கம் நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கிராமங்களிலே இன்றும் இவ்வாறு விளையாடும் சிறுமிகளைச் சிறுபான்மையாகக் காணமுடியும். இதனைப் 'பிள்ளைப் பெத்து விளையாடுதல்' என்று கிராமங்களிலே அழைப்பர். பெரியவர்களின் நடத்தைகளைப் பார்த்துப் 'போலச்' செய்யும் பாங்குடைய குழந்தைகள் இவ்வாறு விளையாடுவது இயல்பானதே யெனலாம்.

சிற்றிலமைத்துச் சிறுசோறட்டு விளையாடுவது போலவே சிறுதேருட்டும் விளையாட்டும் சிறுவர்கள் மத்தியிலே வழக்கில் இருந்தது. சிறுவர்கள் ஒன்று கூடிக்குதூகலமாக விளையாடும் இவ்விளையாட்டைப் பற்றிய குழந்தைப் பாடல்களும் ஈழத்துக் குழந்தைப் பாடல்களிலே உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென்னங்குரும்பையிலே தேர்கட்டி விளையாடும் குழந்தைகளின் விளையாட்டைப் பேராசிரியர் கவிநயத்துடன் சொல்லிச் செல்கின்றார்.

**'தென்னங் குரும்பை தெரிந்துதா னெடுத்தே**
**அன்னதன் மேலே அளவுடை யீர்க்கை**
**அமைவுறக் குத்தி அழகுறு சிறுதேர்**
**பூப்பல சூட்டிப் புனைந்தினி தியற்றி**
**நாப்பட் கடவுளை நலமுட னேற்றிக்**
**காகா டுண்டுண் காகா டுண்டுண்**
**ஈதோ சாமி எழுந்து தேர்வாறார்**
**காகா டுண்டுண் காகா டுண்டுண்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா வழிவிடு ஆத்தைநீ விலகு
காகா டுண்டுண் காகா டுண்டுண்
என்றே இயம்பி ஏருறு தேரினைக்
கட்டிய இழையாற் பற்றி இழுத்தும்'

சிறுவர்கள் சிறுதேரிழுக்கும் காட்சியைக் கைதேர்ந்த புகைப்படக் கலைஞன் ஒருவன் தன் 'கமரா' வுக்கூடாகக் காட்டியது போலப் பேராசிரியர் காட்டிச் செல்கின்றார்.

சிற்றில் அமைத்து, சிறுதேர் உருட்டி விளையாடும் வழக்காற்றில் இருந்தே பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களிலே சிற்றிற் பருவம், சிறுதேர்ப் பருவம் என்பன தோன்றியிருக்க வேண்டும். இன்று இவ்விளையாட்டு மிகவும் அருகி விட்டது. சிறுதேர் உருட்டுவது போலவே வண்டி இழுத்து விளையாடும் வழக்கமும் சிறுவர்களிடையே வழக்கில் இருந்தது. அதனைப் பேராசிரியர் பின்வருமாறு படம் பிடிக்கின்றார்.

'பனையி னோலையைப் பாங்கா யெடுத்துச்
சித்திர வடிவச் சில்லிரண் டிழைத்து
முருக்கஞ் செத்தலை யவற்றிடைக் கோத்துக்
குறுக்கே துலாவெனத் தடியொன் றமைத்துப்
பண்ணிய வண்டி பற்றி இழுத்தும்'

இன்றைய சிறுவர்களிடையே இவ்விளையாட்டினைக் கண்டு கொள்ள முடியாது. வண்டி இழுத்து விளையாடுதல் போன்று யாழ்ப்பாணப் பிரதேசத்திலே குதிரைச் சவாரி செய்து விளையாடும் விளையாட்டும் கிராமங்களிலே வழக்கில் இருந்தது.

'சிறுதடி யொன்று சேரிரு பக்கமும்
வாழைநா ரெடுத்து வளமுறக் கட்டிக்
கடிவா ளமதாய்க் கருதி யொருவன்
வாயிற் கவ்வ வாரிரு நாரைப்
பின்நின் றொருவன் பேணிப் பிடித்துச்
சவுக்கினை யுயர்த்தித் தாங்கிய கையுடன்
குதிரைச் சவாரி கொள்வபோ லேகிப்'

இன்று முற்றாக மறைந்து போன இவ்விளையாட்டினைக் காதலியாற்றுப் படையினூடே காண முடிகின்றது. இந்த வகையிலே காதலியாற்றுப் படைக்குள்ள பண்பாட்டு முக்கியத்துவம் தெற்றெனப் புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்குமான விளையாட்டாகப் பட்டம் விடுதலைச் சொல்லலாம். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல பாகங்களிலும் பட்டம் விடுதல் இன்றும் வழக்கில் உள்ளது. பட்டங்களிலே பலவகையுண்டு. பட்டங்களின் வகைகளைப் பேராசிரியர் தமது காதலி ஆற்றுப்படையிலே வரிசைப்படுத்திக் கூறியுள்ளார்.

**'மூங்கி லெடுத்து முறையொடு கட்டிக்**
கடதாசி யொட்டிக் குஞ்சம் புனைந்த
கொக்குக் கொடியுங் கோதறு பருந்தும்
வளம்பெறு வாலா வசையில் சந்திரன்
எட்டுமூலையுங் கட்டுக் கொடியும்
உரற்கொடி மீன்கொடி உயராட் கொடியும்
.....................................................
பூட்டிய விண்கள் பொலிவொடு கூவக்
காற்றொடு சேண்புகு மாண்புடை யோதையும்'

பட்டத்தினைக 'கொடி' எனக்கூறும் வழக்காறும் உண்டு. இன்று இன்னும் வளர்ச்சியடைந்த நிலையிலே பட்டங்கள் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

**பெரியவர்கள் விளையாடும் விளையாட்டு**

பொழுது போக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பெரியவர்கள் விளை யாடும் விளையாட்டுக்களும் இப்பிரதேசத்திலே வழக்கில் இருந்துள்ளன. பெரியவர்கள் விளையாடும் விளையாட்டுக்களைச் சற்றுச் சுருக்கமாகவே பேராசிரியர் தொட்டுச் செல்கின்றார்.

**'தரைமேற் கோடு தயவுடன் கீறித்**
தாயக் கட்டை தாவி எறிந்தும்
சோகி யெடுத்துச் சோணாலு பாணா
லேன்றே யுறுக்கி யெறிந்துதா னுருட்டியும்
பந்தயம் பேசிப் பலபேரிருந்து
நாயும் புலியும் நலிவிலா தாடியும்
சீட்டைக் கையில் நீட்டி விரித்துப்
பல்வகையாட்டம் ஒல்வகை ஆடியும்'

தாயம் விளையாடுதல், நாயும் புலியும் விளையாடுதல் இன்றும் கிராமங்களிலே உள்ளது. 'சீட்டாட்டம்' (கடதாசி விளையாட்டு) இன்று கிராமங்களிலும் நகரங்களிலும் வழங்கி வருவதைக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே சிறப்பான பொழுதுபோக்குப் போட்டியான வண்டிற்சவாரி பற்றியும் பேராசிரியர் தமது காதலியாற்றுப்படையிலே பதிவு செய்துள்ளார். யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழக்கில் இருந்த எல்லா விளையாட்டுக்களையும் இவர் பதிவு செய்யவில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

**வழிபாடும் சடங்குகளும்**

யாழ்ப்பாணச் சமூகத்திலே பெரும்பான்மையாக வழக்கில் இருக்கும் இந்து வழிபாட்டு மரபுகளையே இவர் காதலியாற்றுப்படையிலே சுட்டிச் செல்லுகின்றார்.

**'நெற்றியிற்சாந்தப் பொட்டினை அணிந்து**
**வில்வ மேற்றி விளங்கு காதினர்**
**நெற்றியின் நாமம் நேராயிழுத்துச்**
**செவிமேற் றுளசி சிறப்புற வைத்து'**

யாழ்ப்பாணத்திலே சைவ வைஷ்ணவ வேறுபாடின்மையை உணர்ந்த பேராசிரியர் சிவன், விஷ்ணு, முருகன் முதலான தெய்வங்களை மக்கள் வணங்குவதைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார். நல்லூர், செல்வச்சந்நிதி, கந்தவனநாதர், கணபதிகோயில், பசுபதீஸ்வரர் கோயில், வல்லிபுரக் கோயில் முதலானவற்றையும் சுட்டிச் செல்லுகின்றார்.

சைவர்கள் நேர்த்திக் கடனுக்காகக் காவடியெடுத்தல், பாற்செம்பு எடுத்தல் முதலானவற்றையும் சுட்டிக் காட்டியுள்ளார். காவடிகளிலும் ஆட்டக்காவடி பற்றி மிக விரிவாகப் பேசுகின்றார்.

**வளைவுறச் செய்து கலிங்கம் வேய்ந்து**
**நாற்பாலிறகு நலமுறக் கட்டிக்**
**கைபுனைந் தியற்றிடுங் காவடியெடுத்துத்**
**தோள்மே லேற்றித் தோமற வைத்து**

ஆடும் காவடியாட்டத்தினைத் தமது காதலியாற்றுப்படையிலே பதிவு செய்த பேராசிரியர்

**'முள்ளு மிதியடி கொள்ளு மடியிணை**
**உறுத்த வணிந்தே யொன் பூக்காவடி'**

எனக்காவடியின் வகைகளை விளக்கிச் செல்லுகின்றார். பானிறை பொற்குடந் தலைமேற் தாங்கி எனப் பெண்கள் பாற்குடம் எடுத்து வழிபாடு செய்வதையும் சுட்டிச் செல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தைச் சேர்ந்த துறவிகள் பலர் இப்பிரதேசத்தில் ஒரு காலத்திலே நிறையக் காணப்பட்டனர். இக்காலத்திலே மிகமிக அருந்தலாகவே காணலாம். இத் துறவிகளைச் 'சன்னியாசிகள்' 'சாமிமார்' என அழைக்கும் வழக்காறும் உண்டு. இவர்களிற் சிலர் 'கஞ்சா' அடிக்கும் வழக்கமும் உடையவர்களாகக் காணப்பட்டுள்ளனர். இவர்கள் கஞ்சா அடிக்கும் முறைமையைப் பேராசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

**'சிறப்புறு மூலியைச் செர்த்திடக் கசக்கி**

**.............................................**

**நிகரில் சிமிழியில் நிறையவடைத்தே**
**ஆக்கினிப் பொறியை அமைவர மூட்டிப்**
**பக்கென விழுத்துப் பகர்தம் அடித்தே**
**இடுக்கிய கண்ணராய் இறைவனை வாழ்த்தி**
**மிக்கமெய்ஞ் ஞானம் மேதகப் பேசி..........'**

சாமிமாரிடம், இப்பழக்கம் காணப்பட்டமைக்குப் பல சான்றுகள் உள. சுப்பிரமணிய பாரதியாரும் இப்பழக்கத்திற்கு உட்பட்டவர் எனக் கூறுவர். இவ்விடத்திலே யாழ்ப்பாணத்துச் சாமியாரிடத்துப் பாரதியாருக்கு இருந்த உறவும் நினைவு கூரத்தக்கது.

காதலியாற்றுப் படையிலே அச்சுவேலிப்பதியை அறிமுகம் செய்யும் பொழுது

**'நச்சிடு காவி தோய்ச்சிடு முடையினர்**
**பொலிவெண்ணீறு பூசிடு முடலினர்**
**அக்கினை அணிந்த அழகுறு கழுத்தினர்'**

என அங்கு வாழும் துறவிகளை அறிமுகம் செய்து, அவர்கள் சாத்திரம் சொல்லும் திறனையும் விதந்து பாடுகின்றார். யாழ்ப்பாணப் பிரதேச மக்களிடம் (சாத்திரம் பார்க்கும்) சோதிடம் பார்க்கும் வழக்காறு இன்றும் பலமாகவே உள்ளது.

### நம்பிக்கைகள்

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கும் எல்லா நம்பிக்கைகளையும் பேராசிரியர் தமது காதலி ஆற்றுப்படையிலே பதிவு செய்தார் என்று கூற முடியாது. எல்லா நம்பிக்கைகளையும் பதிவு செய்வதும் கடினமானது. தேவை நோக்கித் தாம் அத்தியாவசியம் எனக்கருதிய சில நம்பிக்கை களையே, அதுவும் குறிப்பாகக் கிராமிய நம்பிக்கைகளையே குறிப்பிட்டுச் செல்லுகின்றார். பேய், பிசாசு, முனி முதலானவை பற்றிய நம்பிக்கை களையும், காகம் கரைதல், நாய்க்கு வாய் கட்டுதல் முதலானவை பற்றியும் அழகாகக் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் தரும் சுடுகாட்டிலே பேய்கள் வாழும் என்ற நம்பிக்கை கிராம மக்களிடையே நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. சுடுகாட்டிலே வதியும் பேய்களைப் பற்றிப் பேராசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

**'பிரம்ம ராட்சதனும் பேரெறி மாடனும்**
**கொள்ளி வாலும் கொத்தி யாத்தையும்**
**இரத்தக் காடேறி இருதலைப் பிடாரி**
**இடர்செய் கூளியும் எச்சிப் பிசாசும்'**

பேய்களைப் பற்றிக் குறிப்பிட்டமை போலவே முனிகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணப் பிரதேசத்திலே கோட்டைமுனி, வல்லை முனி, புறாப்பொறுக்கி ஆல்முனி எனப் பல்வேறிடங்களிலும் முனிகள் இருந்ததாகச் செவிவழிக்கதைகள் நிலவுகின்றன. யாழ்ப்பாணப் பிரதேச மக்களிடையே அச்சம் விளைவிக்கும் முனிகள் பற்றிய நம்பிக்கை நிறைய இருந்திருக்கின்றது. சிறப்பாக ஒவ்வொரு ஊரிலும் முனிகள் ஒன்றோ, பலவோ இருந்ததாக நம்பும் நம்பிக்கை மிக அண்மைக்காலம் வரை நிலவியுள்ளது. யாழ்ப்பாணத்து மக்களிடையே முனிகள் பற்றி இருந்த நம்பிக்கையைப் பொதுமைப்படுத்திப் புறாப்பொறுக்கி ஆலமரத்து முனி பற்றிப் பேராசிரியர் நயம்படப் பதிவு செய்துள்ளார். மக்கள் நடமாட்டமற்ற இடத்திலே அடர்ந்து வளர்ந்த மரங்களிலேதான் முனிகள் வாழும் என்ற நம்பிக்கையே இப் பிரதேச மக்களிடையே வழங்கி வந்தது.

**'மலைபோ லுயர்ந்து விண்ணை அளாவித்**
**தனிவழிச் செல்வோர் மனது கலக்கும்**
**புறாப் பொறுக்கி யாலென் பெருமரம்**
**தன்னைத் தன்வாழ் பதியெனக் கொண்ட**
**வல்லை முனியும் வாரிரு சங்கிலி**
**சலசல வென்னப் பலபல வொலியொடு**
**தன்பரி வாரஞ் சார்ந்து சூழப்**
**பாதியாம வேளை தன்னிற்**
**கூ கூ வென்று குமுறிக் குமுறிப்**
**பற்பல உருவோ டெழுந்து திரிந்தும்'**

முனிகள் பற்றிய விபரங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் கூறிய பேராசிரியர் வல்லை வெளியிலே உலாவும் கொள்ளிவாற் பேய்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். வல்லை வெளியாலே கொள்ளிவாற் பேய்கள் உலாவுகின்றன என்ற நம்பிக்கை யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் பலரிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இலங்கையர்கோனின் வெள்ளிப் பாதசரம் என்னும் சிறுகதை யிலும் இக்கொள்ளிவாற் பேய்கள் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**'நள்ளிரா வேளை நீள்வெளி தோறும்**
**கொள்ளி வாற் பேய்கள் குழுமிநெருப்புப்**
**பற்றிய வாலொடு பாய்ந்து விரவி**
**ஆர்ப்பொடு களித்தே அலமரும்.......'**

எனக் கொள்ளிவாற் பேய்கள் பற்றிய நம்பிக்கையைச் சுட்டிச் செல்லுகின்றார்.

இப்பேய்கள் மக்களைப் பிடித்து வருத்தும் என்ற நம்பிக்கையும் இப்பிரதேச மக்களிடையே வழங்கி வந்துள்ளது. பேய் பிடித்தவர்களுக்குப் 'பேய்க்குப்பார்த்தல்' கழிப்புக் கழித்தல் காய்வெட்டுதல் மடைபரப்புதல் முதலான செயற்பாடுகளும் நிலவி வந்துள்ளன. இன்று மரபுவழிச் சீர்மியச் செயற்பாடாகக் கருதப்படும் இந்த நடைமுறை மிகமிகச் சிறுபான்மையாகக் கிராமிய மக்களிடையே இன்றும் காணப்படுகின்றது.

**'பேய்க்கோட் பட்டுப் பெருந்துய ரெய்திடு**
**மாந்தர் தமக்கு மாற்றது வாக**
**மடைபல பரப்பி உடுக்கினை அடித்து**
**மேலான வாசான் வாலய மிட்ட**
**வன்தேவதையை வளமுற வழைத்துக்**
**காய்பல வெட்டிக் கழிப்புக் கழித்துப்**
**பேயதைப் போக்கும் பேயுரு மோதையும்'**

பேயோட்டும் நிகழ்வை மேற்காட்டியவாறு பேராசிரியர் தமது காதலி யாற்றுப் படையிலே படம்பிடித்துக் காட்டியுள்ளார் எனலாம்.

காக்கை கரையும்போது நிமித்தம் பார்க்கும் நம்பிக்கையும் இம் மக்களிடையே நிலவிவந்துள்ளது. காக்கை கரைந்து சில செய்திகளைச் சொல்லும் என்ற நம்பிக்கை மிகச் சிறுபான்மையாக இன்றும் கிராம மக்களிடையே நிலவி வருகின்றது.

**'....... வருவது போவது முன்னித் தெரித்தும்**
**கருநிறக் காக்கை'**

எனப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார் காக்கை அழுதால் நிழல் அடி அளந்து நிமித்தம் பார்க்கும் வழக்காறு சோதிட ரீதியிலும் சொல்லப் பட்டுள்ளது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கருமகள் அழுதபோது கடுகவே அடி அளந்து**
ஒரு பதினாலும் கூட்டி...............
வருவது சுகம் இலாபம், மழை, படை அயனம் வெற்றி
சரிவர ஏழும் வந்தால் சாவென்று சாற்றலாமே'

என்ற ஒரு சோதிடப்பாடலும் இப்பிரதேசத்திலே வழங்குவதை இவ்விடத்திலே சுட்டிக் காட்டலாம்.

நாய்கள் கடிக்க வந்தால் வைரவரை நினைத்து வைரவர் மந்திரத்தை உச்சரித்தால் நாய் வாய் திறக்காது அடங்கி ஒடுங்கிச் சென்று விடும் என்ற நம்பிக்கையும் இப்பிரதேச மக்களிடையே வழக்கில் இருந்தது.

**'வீட்டு வாயிலின் நீட்டிய காலுடன்**
வளர்துயி லயின்று வழிமேற் செல்லும்
மாந்தர் காலடி போந்த மணத்தான்
நரகு காக்கு முருகெழு நாய்போல்
விரைவுட னெழுந்து துரிதமாய்ப் பாய்ந்து
குதிரைபோனின்று குரைத்திடு நாய்கள்
உன்றனை நோக்கி உறுமி எதிர்த்திடின்
சிந்தனை கலங்கிச் சேர்பயம் எய்திடேல்
வயிரவன் தன்னை மனதினில் நினைந்தவன்
செயிர்தீர் மந்திரம் தெரிவுறக்கிளப்பின்
காலுக் கிடையில் வாலைக் குழைத்துக்
களிமின வடைந்துன் காலடி முகந்து
முறையாய் அடங்கி முகத்தினை நோக்கும்'

இந்த நம்பிக்கையை மிகவும் சுவையாகப் பேராசிரியர் சுட்டிச் செல்வதைக் காணமுடிகின்றது. நாய் கடிக்க வரும்பொழுது வைரவர் மந்திரம் கூறவேண்டும் என்ற வழக்காறு மிக அண்மைக்காலம் வரை கிராம மக்களிடையே நிலவிவந்துள்ளது. நாய் கடிக்க வரும்போது வைரவர் மந்திரத்தைக் கூறி மூன்றுமுறை நாயின் முகத்திலே காறியுமிழ்ந்து தெருப்புழுதியை (மணலை) அதன் முகத்திற் போட்டால் நாய் அடங்கி விடும் என்று இன்றும் முதியவர்கள் கூறுகின்றனர். முதியவர்கள் கூறும் வைரவர் மந்திரம் பின்வருமாறு:

**'அலறிய வாயும் முறுகிய பல்லும்**
ஆதி வயிரவனே
அலகு திறவாதே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மந்திரத்தை மூன்று முறை கூற வேண்டுமென்று கூறுவர். இத்தகைய நம்பிக்கைகள் பல இப்பிரதேசத்திலே வழக்கில் இருந்தன என்பதை காதலியாற்றுப்படையினூடேயே காணமுடிகின்றது.

**பொதுவானவை**

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குப் பொதுவாகவும் வடமராட்சிப் பகுதிக்குச் சிறப்பாகவும் உள்ள பண்பாட்டமிசங்கள் பலவற்றைப் பேராசிரியர் தமது காதலியாற்றுப்படையினூடு பதிவு செய்துள்ளார். பனையோலையைப் பயன்படுத்திப் பெட்டி, கடகம், பாய், குட்டான் முதலியன செய்வதை மிகவும் விரிவாகக் கூறியுள்ளார் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள கல்வீடுகள், ஓலை வீடுகள், தெருமூடிமடங்கள், ஆவரோஞ்சுதறிகள் முதலான வற்றையும் திருவிழாக்கள், கூத்துக்கள், களியாட்டங்கள் முதலான வற்றையும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

பேராசிரியரின் காதலியாற்றுப்படையைப் படிக்கும்போது சங்கால ஆற்றுப்படைகளைப் படிக்கும் உணர்வு தோன்றுகின்றது. சிறப்பாக பெரும்பாணாற்றுப்படையைப் படிக்கும் நினைவுகளே மேற்கிளம்புகின்றன. பேராசிரியர் சிலப்பதிகாரத்துக் கடலாடு காதையையும் இடையிடையே நினைவுபடுத்துகின்றார். யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பேச்சுவழக்கைத் தமது நாடகங்களிலே அற்புதமாகப்பதிவு செய்தமை போலவே காதலியாற்றுப் படையில் பேச்சு வழக்கோடு ஒட்டிய யாழ்ப்பாணத்துப் பண்பாட்டை மிகச் சிறப்பாகப் பேராசிரியர் சித்தரித்துள்ளார். யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குப் பொதுவாகவும் வடமராட்சிப் பகுதிக்குச் சிறப்பாகவும் அமைந்த பண்பாட்டுக் கோலங்களைப் படம்பிடித்துக் காட்டிய ஒப்பற்ற இலக்கிய மாகக் காதலியாற்றுப் படையைக் கொள்ளலாம்.

இன்றைய இளைய தலைமுறையினர் ஈழநாட்டின் தமிழ்ப் பண்பாட்டி னையும் வாழ்வியலையும் அறிந்து கொள்ளப் பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் காதலிஆற்றுப்படை உதவும் என நம்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின்

# காதலியாற்றுப்படை

சீர்மிகு முவாநாட் சிறந்தொளி பரப்பும்
எர்பெறு தண்மதி எழிலது போலக்
கதிருடை யொண்ணுதற் கவினுறு காரிகாய்!
காமன் வில்லைக் காய்ந்த புருவமுங்
கழிமல ராம்பலைப் பழித்தவுண் கண்ணுங்
கார்முகி லென்னக் கறுத்தவீ ரோதியும்
வணங்குமின் சாயல் வளரமை மென்றோட்
சுணங்குசே ரிளமுலைத் துடியிடை மடவாய்!
காதற் கயிற்றாற் கவர்ந்து பற்றியுன்
தீதறு முள்ளந் திண்ணெனப் பிணித்துத்
தன்னுளந் தன்னிற் கொண்டொளித் திட்ட
அன்புடைக் கள்வன் அமர்ந்துபோ யுறையும்
இன்பதி யாங்கென எமைநீ கேட்பின்,
குறிஞ்சிசேர் நிலந்தொறுங் கோதற வளர்ந்தே
எறிகதிர் தாங்கி விளையுநற் றினையுஞ்
செறியுமின் காத்தொறுஞ் சீர்பெற வோங்கும்
நெறிபடு வாழையின் நேர்சுவைப் பழமும்
மத்தளம் போல வளர்ந்தினி துருண்டே
இத்துப் பழுத்தே யின்னற வொழுகும்
பைஞ்சுளை பொதிந்த பலாவின் கனியும்
அந்தி மாலையிற் றண்ணற வுண்டு
புந்தி மயங்கிப் பெடையொடு காதலின்
இன்புசேர் கீதம் இசைக்குமப் போழ்து
கிந்துகாற் காகங் கீழே விழுத்தும்
நற்சுவை யயின்றோர் நீணெடுங் காலம்
பொற்புறு மிளமையொ டிருக்க வியற்றுங்
கற்பகத் தருவின் கண்கவர் கனியும்;
அதாஅன்று,
காலும் வெயிலுங் கூதிரும் மழையுஞ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலவு நோக்கி யுளந்தள ராதே
அந்தி வேளை அசையுங் காற்றாற்
கட்டு மரங்களிற் கடன்மே லேகிக்
கங்குற் காலங் கழிந்த பின்றைக்
கொண்டுதாம் வந்து விலையது கூறும்
பல்வகைப் புலவுமீன் பரவுறு குவியலும்;
முல்லையின் புறவ முறைமையி லடைந்தே
மெல்லிள மாதர் வெவ்வேறு கூட்டமாய்
ஒள்ளுறத் தீட்டிய உழவா ரைக்கை
வள்ளுறச் செருக்குபுல் வளம்பெறத் திணித்துப்

பிற்பகற் சந்தையிற் பீடுற வைத்துப்
பற்பல விலைபகர் பறியி னீட்டமும்;
வரைநேர் திரைசெறி வான்கடற் பரப்பின்
மரக்கலக் குழாஅ மாண்பொடு சென்று
கங்கைநீர் பொலியும் வங்கந் தன்னையும்
பாயு மிராவதி பாய்ச்சிடு புலங்கள்
நெல்லொடு செறியும் நிகரில் காழகம்
வந்தேறு காக்கி வளநாட் டோடும்
எந்நாட் டினையு முந்துற வடைந்து
மன்பதை தனக்கு மாறாப் பசிப்பிணி

பண்புறத் தீர்க்கும் பசியநெற் றிரளுங்
கொள்ளுங் கடலையு மெள்ளும் பயறும்
பல்வகைத் தானியம் பாங்கொடு கொணர்ந்து
சுங்கங் கொடுத்துத் துறையிற் பறித்த
விண்ணை யளாவு மூடையின் குவையும்;
காந்திக் கதருங் காசு மீரமுந்
தோய்ச்சிடு சாயங் காய்ச்சிடு கலிங்கமும்
மறுநா டெங்கணும் பெறுவதற் கரிதாய்க்
கூறைநா டளித்த கோலப் புடைவையும்
வள்ளுவன் சேலையும் வான்பட் டணமும்

எவ்வகைச் சேலையு மேரொடு விளங்கிக்
கண்ணினை யிழுக்குங் கடைகளின் நிரைகளும்;
விட்டுக் கள்ளினை விளைபத மெய்துநெல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவினிற் சுட்ட வண்புளிச் சப்பமும்
பனங்காய்க் களியுடன் சாமைமாக் குழைத்து
வனைபந் தினைப்போல் நெய்யிற் போட்டுத்
தட்டுத் தட்டாய்ச் சுட்டுமே லெடுத்துச்
சுளகிற் பரப்பி விலையது கூறுங்
கமழ்தரு செம்பனங் காய்ப்பணி யாரமும்
அருவிலை கொடுத்தே அரக்கு மாந்தும்

மாந்தர் வாய்க்கு வெங்கறிப் பாக
வளமுற வுதவும் வடையின் கடகமும்
முறுக்குநல் வாய்ப்பன் மோதக மிட்டலி
பிட்டுத் தோசை புகழிடி யப்பம்
எள்ளுங் கட்டியு மிடித்துநன் கெடுத்த
நெய்பிழி பாகின் நிகரில் திரணையும்
பாணிப் பனாட்டும் பகர்பனங் கட்டியும்
ஆற்றாது வெம்பி யழுமகார் தமக்கு
மாற்றா யுதவுஞ் சீனிமிட் டாயும்
ஆகிய,

அரும்பெறற் புண்ணியம் பலவு மீண்டி
வரிசையாய் விற்கும் வளம்பெறு கடைகளும்;
அழகுறு வன்னம் அமைவுறப் போட்டுத்
தொழிலமை வனிதையர் திறமையோ டிழைத்த
பெட்டிபாய் குட்டான் பெயர்பெறு கதிர்ப்பாய்
அடுக்குப் பெட்டியும் அருவிலை மூடலும்
பிட்டவி நீத்துப் பெட்டியுஞ் சுண்டும்
பனையின் குருத்தைப் பதனமாய் வார்ந்து
பன்னிறந் தீட்டிய பன்னோலை கொண்டு
கைவல் விளையர் கருதி யிழைத்த

ஆனைப் பெட்டியு மழகிய தேரும்
கொட்டைப் பெட்டியுங் கிலுக்குப் பெட்டியும்
எனவாங்கு,
இன்னணம் நெருங்கிடு பன்னக் கடைகளும்;
பொங்கலுக் கென்றே புதுக்குட மேந்திக்
காயுற் கனியுங் கார்ப்பச் சரிசியும்
சிறார்கழி மகிழுஞ் சீன வெடிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டிக் குள்ளே யிட்டுத் தலையின்
வைத்துயர் கையாற் பெட்டியைப் பற்றிக்
கதைபல பேசிக் கான்வழி செல்லும்

வனிதையர் தமது வளம்பெறு கூட்டமும்;
வாடைக் காற்றான் வளைந்துமெய் கொடுகி
உறைபோற் போர்வை யுடம்பிற் போர்த்து
வாயிற் சுங்கா னோயாது புகைத்துப்
பசியால் வாடி விதியினை நொந்து
வேலை தேடி வெய்துயிர்ப் புற்றுக்
கொக்குப் போலக் கோடிய முகத்துடன்
துக்க மடைந்து துறைமுகப் பக்கல்
நிற்க லுற்றவர் நெருங்கிருங் கூட்டமும்;
தரைமேற் கோடு தகவுடன் கீறித

தாயக் கட்டை தாவி யெறிந்தும்
சோகி யெடுத்துச் சோனாலு பாணா
லென்றே யுறுக்கி யெறிந்துதா னுருட்டியும்
பந்தயம் பேசிப் பலபே ரிருந்து
நாயும் புலியு நலிவிலா தாடியுஞ்
சீட்டைக் கையில் நீட்டி விரித்துப்
பல்வகை யாட்டம் ஒல்வகை யாடியுங்
கோதிலா மணன்மேற் குழுமி யிருந்து
மகிழுறு மாந்தர்தம் மாப்பெருங் கூட்டமும்;
காடியிற் றோய்த்த காழ்ப்பனங் கொட்டையைத்

தாயர்தங் கையிற் றாவினர் வாங்கி
வண்டியுஞ் சொக்கும் பனங்களி புரள
வண்டினந் தேனை யுண்டல் போலக்
களியினை மாந்திக் காழ்தனைக் கையில்
ஏந்து மிகுவலி யின்றித் தயங்கும்
புன்றலைச் சிறார்த மின்புறு கூட்டமும்;
ஏடது கையி லேந்திய பாரமாய்
ஏனோ தொல்லையீ தெம்மை வருத்தும்
என்றுள நொந்தே யின்னல்தா னெய்தலும்
பற்றிய கோலொடு பள்ளிக் கழைத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தியு முரப்பியு மிழுத்துந் தாய்மார்
பின்செல வழுது பெருந்துய ரோடு
முன்செலும் பாலர்தம் மொய்யிருங் கூட்டமும்;
அதாஅன்று,
தண்ணளி யில்லாச் சட்டம் பியாரும்
பள்ளியை யடைந்தாற் பலவாய் வருத்துவர்
என்றுபல் சாட்டுகள் நண்பரோ டெண்ணி
ஏட்டைக் கட்டி யிறப்பி லொளித்துப்
புளிய மரத்திற் தூங்கிளங் காய்க்குக்
கல்லுப் பற்றி யிலக்கா யெறிந்தும்

நாவன் மரத்து நலம்பெற வேறித்
தாவிக் கொம்பரிற் தருபழம் பறித்துங்
கிந்தி யடித்தும் வளைய முருட்டியுந்
தட்டுப் பாய்ந்துங் கிட்டி யடித்தும்
மாவின் கொட்டை மகிழ்வொடு போட்டும்
பல்வகை யாட்டம் பாங்குட னாடும்
பள்ளிப் பொடியள் பண்புறு கூட்டமும்;
மெய்யதி லழகுற மேலுடை யணிந்து
கையதி லதற்கிணைக் கருங்குடை பிடித்துத்
தலையது தன்னிற் தலைப்பாத் தாங்கி

ஒருகமுக் கட்டி லுறுதிகள் கொண்டு
முறைசெய் மன்ற முறையுட னேரு
முறைநூ லறிவரை விருப்பொடு சூழ்ந்தே
அரையிற் சால்வை யமைவுறக் கட்டி
வணங்கிச் செல்லும் வழக்கா ளிகளும்
முன்னிய வழக்கை முறையுட னமைக்கும்
காட்டுத் தரகருங் கோட்டுப் புலிகளும்
ஆகிய மாந்தர்த மளப்பருங் கூட்டமும்;
செக்கர்ச் சடையோன் சிவபிரான் றனக்குச்
சிறப்புறு மூலியைச் சேர்ந்திடக் கசக்கி

நீர்மலி கங்கை நீர்த்துளி விட்டு
நிகரில் சிமிழியி னிறைய வடைத்தே
அக்கினிப் பொறியை அமைவர மூட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கென விழுத்துப் பகர்தம் மடித்தே
இடுக்கிய கண்ணரா யிறைவனை வாழ்த்தி
மிக்கமெய்ஞ் ஞானம் மேதகப் பேசி
அரகர சம்போ அனந்தா மகாதேவா
என்றே யாற்றி இன்பொடு மடங்களின்
உலக வல்லலை யொழித்துமெய்ம் மறந்தே
இயற்றுதற் கரிய யோக நிட்டையின்

மயங்கிக் கிடக்கு மாதவர் கூட்டமும்;
பற்றிய வாழ்வு பரித்தலின் முன்னே
சிற்றி லிழைத்துச் சிறுசோ றாக்கிப்
பின்னே வருவதை முன்னே யுணர்வபோல்
வண்டலின் மணவினை மகிழ்வோ டாற்றியுஞ்
சிறார்தமை யீன்று சீரொடு வளர்ப்பபோற்
களிமட் பாவை யழகுறச் செய்து
பூவினைச் சூட்டித் துகிலினை யுடுத்திச்
சீராட்டி யோராட்டுஞ் சிறுமிகள் குழுவும்;
தென்னங் குரும்பை தெரிந்துதா னெடுத்தே

அன்னதன் மேலே யளவுடை யீர்க்கை
அமைவுறக் குத்தி யழகுறு சிறுதேர்
பூப்பல சூடிப் புனைந்தினி தியற்றி
நாப்பட் கடவுளை நலமுட னேற்றிக்
காகா டுண்டுண் காகா டுண்டுண்
ஈதோ சாமி யெழுந்துதேர் வாறார்
காகா டுண்டுண் காகா டுண்டுண்
அம்மா வழிவிடு ஆத்தைநீ விலகு
காகா டுண்டுண் காகா டுண்டுண்
என்றே யியம்பி ஏருறு தேரினைக்

கட்டிய இழையாற் பற்றி யிழுத்தும்,
பனையி னோலையைப் பாங்கா யெடுத்துச்
சித்திர வடிவச் சில்லிரண் டிழைத்து
முருக்கஞ் செத்தலை யவற்றிடை கோத்துக்
குறுக்கே துலாவெனத் தடியொன் றமைத்துப்
பண்ணிய வண்டி பற்றி யிழுத்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைக் கறங்கை யோர்ந்தினி தியற்றிக்
காலுக் கெதியே கதமுடன் பரிந்து
வழியில் வாயிலில் வருவோர் போவோர்
தமையுங் கணியார் தரியா ரொருகணம்

கழிமகிழ் நாயுங் காலடி தொடரக்
குடுமியுங் குலைந்து குலவி யாட
அதிவே கமதாய் ஆத்துப் பறந்து
கதியுட னோடி விளையாட் டயர்ந்தும்,
சிறுதடி யொன்று சேரிரு பக்கமும்
வாழைநா ரெடுத்து வளமுறக் கட்டிக்
கடிவா ளமதாய்க் கருதி யொருவன்
வாயிற் கவ்வ வாரிரு நாரைப்
பின்னின் றொருவன் பேணிப் பிடித்துச்
சவுக்கினை யுயர்த்தித் தாங்கிய கையுடன்

குதிரைச் சவாரி கொள்வபோ லேகிப்
பரிகதி வெள்குறப் பாய்ந்துபாய்ந் தோடி
வீட்டுக் கோடியை நீட்டிய நாக்குடன்
விரைந்து நெடிது வெய்துயிர்ப் புறீஇ
இளைத்துக் கிடக்கு மிளஞ்சிறார் குழுவும்;
வடலி மட்டை யிடாஅ ரேற்றித்
திடமுறப் பலபேர் சேர்ந்துடன் கூடி
வேப்பம் பழங்கள் வீழிடம் நண்ணித்
தந்திர மான மந்திரப் பொறிபோல்
அணிபெற வமைத்தே அணிலைப் பிடிக்க

அதிகளிப் பெய்தி ஆரவா ரிக்குந்
தடிக்கை தாங்கிய பொடிச்சிறார் திரளும்;
வெள்ளரி தன்னோடு வத்தகப் பழமுங்
கிடந்திடு தோட்ட மடைந்துநள் ளிரவிற்
பள்ளியிற் பயிலு மாணவர் பலரும்
ஒன்று கூடி விளையாட் டாகத்
திருடிக் கனியை மணன்மேற் குவித்துத்
தின்று தின்று களித்து மகிழ்ந்தும்,
தென்னந் தோப்புச் சேர்ந்து சென்று
கத்தி கொண்டு மரமே லேறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத் திளநீர் பார்த்துமெல் லிறக்கிக்
கொண்டு வந்து குழுமி யிருந்து
வெட்டிக் குடித்தே யாரவா ரித்தும்
விருப்புட னிருக்கும் வேளை தன்னிற்
சொந்தக் காரர் விரைந்து தொடர்ந்து
பிடிக்க முயன்று கலைத்திடும் போது
பலதிசை யோடிப் பதுங்கு கும்பலும்;
நரைதோ லியனம் அரையிற் கட்டி
அதன்கீழ் முட்டி யசைதர விட்டு
மார்போ டணையத் தோலது தூக்கி

உரனுறு தளைநார் காலிணை மாட்டிக்
கால்மடித் துன்னிக் கருநெடும் பனைமிசைப்
பாளை தட்டிப் பார்த்துச் சீவி
ஏர்தரு மூசலோ டியனத் தசையும்
இன்கள் முட்டியொ டிறங்கும் போதின்
அடிமரத் திருந்து நுனிவரை நோக்கி
நாநீ ரூறி யுதடு வருடிப்
பெருமகிழ் வோடு பிளாவை யேந்தி
அருவிலை கொடுத்து நறவினை மாந்திக்
களிப்புறு மாக்கள் விளிப்புறு கும்பலும்;

முன்னணி மேளம் முறையே யியம்பப்
பின்னணி தொடர்ந்து பெருமகிழ் வெய்திப்
பலபுதுப் பட்டுடை பாங்குட னுடுத்துத்
தலைமேற் சூரிய சந்திரப் பட்டமும்
சடைமேல் நாகமு நலமுற வணிந்து
நெற்றியி னிட்ட பொட்டு மின்னப்
பற்றிய வேர்வை முத்தது போல
நுதன்மே லரும்ப நிறைமதி தோற்கச்
செம்பஞ் சணிந்த சேவடி மீமிசைச்
செம்பொற் சிலம்புஞ் சீறடிச் சரமும்

நுண்ணிடை பூட்டிய நொய்ம்மே கலையுங்
கதிர்முலை மேவிய கதிர்முத் தாரமும்
அருமணி மாலையும் அசையுறீஇக் கறங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரல் நோக்கிப் பெயர்ந்திடு பெண்டிரும்,
வெள்ளைக் கலிங்கமும் விலையுயர் பட்டுங்
கன்மோ திரமுங் கவின்முத் தாரமும்
அணிபன் மாந்த ரசைதரும் பக்கல்
பச்சை யெடுத்துப் படர்வோர் சூழ்தர
இச்சை யுடனே யிவர்மணக் கூட்டமும்
வான்வரை வளர்ந்த வரையுறழ் கோபுரம்

நீண்முடி நெடுந்தேர் நேர்கொடி விளங்கும்
கணங்களுக் கிறைவன் கணபதி கோயிலும்
ஆன்ம கோடிகட் கருடரு முருவாய்ப்
பாசம தறுக்கும் பசுபதி கோயிலும்
பன்முறை வலமாய்ப் பரிவொடு சூழ்ந்து
மறைபல வோதி யிறைவனை யேத்தி
மெய்ம்மேற் றுளங்கும் வெண்ணீற் றுடனே
முக்கட் செல்வன் நுதன்மே லொளிரும்
தன்னமெய்ஞ் ஞானத் தகவுறு விழிமருள்
நெற்றியிற் சாந்தப் பொட்டினை யணிந்து

விஸ்வ மேற்றி விளங்கு காதினர்
தளர்ந்த நடையொடு தாவுறு குழவிகள்
பற்றுக் கோடாய்ப் பற்றிய விரலினர்
சிவமணங் கமழுஞ் சீருடைச் செல்வர்
ஈச னுமையோ டிவர்தரு பவனிபோன்
மாசில் மங்கையர் மருவிச் செல்லப்
பற்பல திசைதொறும் படர்தரு கூட்டமும்;
நெற்றியின் நாம நேரா யிழுத்துச்
செவிமேற் றுளசி சிறப்புற வைத்துச்
செறிமணற் கும்பிகள் நிலவினின் விளங்கும்

வல்லி புரத்து வளர்துயி லயரும்
பார்த்த சாரதி பதும நாபன்
கார்நிறக் கடவுள் கமலக் கண்ணன்
ஆய்ச்சியர் காதலன் மாயக் கிட்டிணன்
ஆயநான் மறைகளும் அளப்பருங் கடவுளை
நேயமொடு வணங்கி நீங்குவோர் கூட்டமும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிப் பிரிவு சாதியா தெவரும்
சரிவரக் குழுமிச் சரவண பவனைக்
குறத்தி காந்தனைக் குழந்தை வேலனை
மெய்யன் புடனே நைபுறு மாந்தர்

வழுத்தி வரம்வேண்டும் வான்பதி யாரருள்
பழுத்த செல்வச் சந்நிதி தனக்குங்
கந்தன் மகிழ்ந்து கருத்துட னுறையுங்
கந்த வனமெனுங் கவின்பெறு பதிக்கும்
நேர்த்திக் கடன்கள் நிறைவுறும் பொருட்டு
வளைவுறச் செய்து கலிங்கம் வேய்ந்து
நாற்பா லிறகு நலமுறக் கட்டிக்
கைபுனைந் தியற்றிடுங் காவடி யெடுத்துத்
தோண்மே லேற்றித தோமற வைத்து
நிகரில் கீதம் நேர்பட வியல

அதற்கிணை மத்தளம் அதிர்ந்து முழங்க
அளவி லனுபவத் தண்ணாவி தாளம்
அமைவுறப் போடும் அவதிக் கிணையாய்க்
காலினை யசைத்துக் காவடி சுழற்றி
மயில்போ லசைவுற் றியல்பா ணாடும்
ஆட்டக் காவடி யெடுப்போ ரொருபுறம்,
முள்ளு மிதியடி கொள்ளு மடியிணை
உறுத்த வணிந்தே யொண்பூக் காவடி
ஒருதோ ளேற்றி யொருகை பற்றி
இழுக்கி லுள்ளம் இறைபா லமைத்துப்

பக்தி யுடனே படருவோ ரொருபுறம்,
பானிறை பொற்குடந் தலைமேற் றாங்கி
விளங்கு முகத்தினர்
மயங்கு மனத்தினர்
அசைதரு கையினர்
விரைவுறு காலினர்
முருகன் பதியினை முன்னிச் செல்லும்
விரதியர் தமது கூட்ட மொருபுறம்,
எனவாங்கு,
செல்லுதல் நோக்கும் பல்லோ ரீட்டமும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலான் வாடி வெந்துய ரடைந்து
போலதன் பேரினன் பேரொல் லாந்தன்
கதிவே றில்லான் பொதியுட னிறங்கித்
துயில்மிக வயர்ந்து துன்பந் தீர்த்த
புளிய மரத்தின் புடைதனைச் சூழ்ந்த
இருக்கை தன்னை விருப்புட னடைந்தே
இன்புறத் துயிலுறீஇ எழுவோர் கூட்டமும்;
கூத்துப் பார்க்கக் கூர்நிலா வேளையிற்
சேர்த்துப் பலரைச் சிந்துகள் பாடிக்
கையிற் தாளங் கணக்குறத் தட்டி

ஆர்ப்பொடு தெருவில் ஆடவர் பெண்டிர்
நெல்லண்டை நோக்கி நல்ல சோடினை
செய்யும் பெரிய தம்பியின் புதல்வன்
நாடகத் தமிழை நன்கன முணர்ந்தோன்
ஆடலும் பாடலும் அமைவரு மாசான்
அண்ணாவி தம்பையன் அருமையாய்ப் பழக்கிய
விலாசம் பார்க்க வெற்றிலை யருந்தி
விரைந்து விரைந்து நடப்போர் குழாமும்,
அதாஅன்று,
காற்றா லசையுறீஇக் கதிருடைத் தினையும்

ஏர்புறு பைங்கூழ் இளங்கதிர்த் திரளும்
ஒன்றோ டொன்றங் குரோஞ்சு மோமையும்;
பெயர்ந்த சோழகம் பெருவிறற் போந்தையின்
காய்ந்த வோலையைக் கனத்து மோதலாற்
கலகல வென்று கலிக்கு மோமையும்;
நல்லோ ரீண்டி நலம்பெற வுறைதலின்
வானம் பொய்யாது வளம்பல பெருக
வான வில்லு விண்ணிற் தோன்ற
நீண்முகில் முழங்கு நிகரி லோதையும்;
வான்கதிர் மேலை வரைதனிற் புகுதரக்

கீழ்நிலைக் கடலி னெழுமதிக் கொழுனனைச்
சுற்றிப் புணரிப் பல்லோர் வனிதையர்
பிசிரின் கரத்தைப் பரிவொடு நீட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்க முயன்றும் பெயர்ந்துமேற் செல்ல
அளவில் லழிதுயர் அடைநெஞ் சினராய்ப்
பாலினும் வெளிய துகிலது போலப்
பரந்து விளங்கும் பெருமணன் மீதின்
வீழ்வெண் பட்டு விலகி யசைதரத்
துனியொடு கரையிற் தேம்பித் தேம்பி
அலமரப் புரண்டே அழுதிடு மோதையும்;

கந்தனை வெட்டி யாலடி யென்னும்
உள்ள முருத்துஞ் சுடுகா டதன்மிசைச்
சவுக்க மரங்கள் சடநிலை யில்லைச்
சிதைந்திடும் வாணாள் சிந்தை மகிழேல்
என்றென் றாற்றிடு மோசைபோற் கவல
எரிந்திடு பிணத்தின் கரும்புகை முகந்து
களித்திடு பேயின் பெருத்திடு மோதையும்;
பிரம ராட்சதனும் பேரெறி மாடனும்
கொள்ளி வாலுங் கொத்தி யாத்தையும்
இரத்தக் காடேறி இருந்தலைப் பிடாரி

இடர்செய் கூளியும் எச்சிப் பிசாசும்
எவ்வகைப் பேயும் எவ்வ முறுத்தாது
நித்தலுஞ் சங்கம் நேர்பெற முழக்கிச்
சேமக் கலங்கள் சீரொடு தட்டி
எமநல் விசையுடன் இருந்திரு வாசகம்
நெஞ்சினை யிழுக்கு மஞ்சொல் லாரம்
மறுகிற் பாடி மாந்தரை யெழுப்பும்
மாசில் பண்ணொலி யாசிலா வோதையும்;
விண்ணொளிர் மதியம் ஒண்ணிலா விரிப்பச்
சித்திர வேலை பொற்பொடு செய்து

நீரிடைப் போகா வள்ள மீதிற்
காதற் பெண்ணொடு களிப்புட னேறித்
தண்டினைப் பற்றித் தகவொடு நீரை
ஏலை யேலோ வெனப்பண் ணிசைத்துக்
காளையர் வலித்துக் கலித்திடு மோதையும்;
பந்தலிற் காயும் பனாட்டுப் பாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து காகம் வாய்ப்புற விருந்து
கொத்தும் போழ்து கடகப் பெட்டியிற்
கண்கவர் கன்னியர் கழியா னடித்துக்
காய்கா யென்று கலைத்திடு மோதையும்;

கொழுநன் மிதித்ததுலா
கோதை யிறைத்தபட்டை
மடையினின் மடுத்ததண்ணீர்
மண்ணதை வெட்டுகொட்டுக
காலை வேளையிற் கனலிமே லெழுமுன்
படப்பைதன் பக்கம் பரவு மோதையும்;
காய்ந்த வைக்கோலுங் கனமணி நெல்லும்
ஆய்ந்து பாரம் ஆர வேற்றி
வைகுறு வேளை வலியநல் லெருது
பையென விழுத்துப் படரும் போதின்

அச்சுத் தேய்ந்த அருவிறற் சில்லுடை
வண்டி வரிசை சைத்திடு மோதையும்;
பனையின் நறவைப் பச்சிளங் குழவிகள்
வனைதரு சங்கின் வார்த்துத் தாயர்
பருக்கித் தடுக்கிற் பாங்கொடு வளர்த்தாலும்
களிமிக வெய்திக் கால்கை யடித்துத்
தஞ்சிறு கையாற் றடுக்கை யீர்த்துக்
காற்பெரு விரலைக் கையிற் பற்றி
வாயினுள் வைத்து வளர்பல் குதலை
இன்புறப் பேசி யிசையொலி பெருக்கி

அன்னையர்க் குவகை யளிக்கு மோதையும்;
மூங்கி லெடுத்து முறையொடு கட்டிக்
கடதாசி யொட்டிக் குஞ்சம் புனைந்த
கொக்குக் கொடியுங் கோதறு பருந்தும்
வளம்பெறு வாலா வசையில் சந்திரன்
எட்டு மூலையுங் கட்டுக் கொடியும்
உறற்கொடி மீன்கொடி யுயராட் கொடியும்
விண்ணை யளாவி வெகுவாய்ச் சாடிக்
கரணம் பலமுறை எழுந்தெழுந் தடித்துப்
பூட்டிய விண்கள் பொலிவொடு கூவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றொடு சேண்புகு மாண்புடை யோதையும்;
புலவோ ரவைக்களம் புகழுட னடைந்து
தண்டமிழ் பாடித் தன்பெயர் நிறீஇய
சீர்சால் புலவன் சிவசம்பு வென்போன்
தன்பா லடைந்தே யின்றமிழ் கற்றோன்
ஆரியந் தன்னி னளப்பரு மாக்கடல்
அருந்தமிழ்க் கலைக்கோர் வரம்பா யுயர்ந்தோன்
வயங்கு செந்நாவின் வசையில் புலவோன்
ஆகம பண்டிதன் அருமறைக் குருமணி
முத்துக் குமார சுவாமி யெனும்பேர்

மூதறி வாளன் முறையுட னடையும்
மாணவர் தமக்கு வளம்பெறு முகில்போற்
போதமெய்க் கலைகள் பொழிந்திடும் வள்ளல்
மாசி லந்தணன் மாப்பெருந் தோன்றல்
சிவனடி பரசுந் தவநெறி யாளன்
கடைய னேனையும் பொருளெனக் கருதி
யறிவு கொளுத்தி யாட்கொளும் பெரியோன்
ஓங்கிய பாடம் உசந்தனன் சொல்ல
நீங்குத லறியா நிறைவுறு மனத்துடன்
செந்தமிழ் கேட்டுச் சீருற வோதியும்

ஆரியந் தன்னை அமைவுறக் கற்றுஞ்
சாரதா பீட வித்தியா சாலையின்
விளங்குறு மாணவர் விளம்பிடு மோதையும்;
இலக்கணந் தன்னை விளங்கக் கற்றே
இலக்கண நெறியால் இயைபுடன் பேசி
வந்தடை மாணவர்க் கந்தமில் தமிழை
இலக்கண முறையுட னியம்பிடு முதியோன்
கோதி லிலக்கணக் கோவிந்த னென்னுங்
குமார சுவாமிப் புலவன் தன்னிடம்
இலக்கணங் கற்கு மிளஞ்சிறா ரோதையும்;

கருமுகில் படர்ந்த காரிரும் பருவம்
துன்னு மாமழை சோனையாய்ப் பெய்ய
நீளிருங் குளங்கள் நீரொடு நிறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையைப் பொருது நிறையுறு வெள்ளம்
துடுமெனப் பாய்ந்து சுழிகீ ழோடியும்
நீந்தி யாடியும் நீரினை யெற்றியும்
சலிப்பி லிளைஞர் ஒலித்திடு மோதையும்;
முந்தையர் விடுத்த முற்றூட் டெனவே
வீடு தோறுஞ் சோடா யடைந்து
புலர்ந்தது பொழுது பள்ளிவிட் டெழுமின்

என்றே சொல்லி யியம்பிடு மொழிபோற்
காகா வென்று கரைந்து கரைந்து
வெள்ளாப் போடு வீட்டு வேலியிற்
சீருட னிருந்து சிறகரைக் கோதி
மிச்சமா யெறியு மெச்சிலைப் புசித்தும்
வீட்டுட் புகுந்து விரைவொடு திருடியும்
அப்ப மேந்திய அருமகார் தம்மை
எத்தி யணாப்பித் தட்டிப் பறித்தும்
விரதநாள் தன்னின் வைத்திடுஞ் சோற்றை
வாவெனக் கத்தி வான்கிளை யழைத்துக்

கரவா துண்டும் வருவது போவது
முதலிய குறிகள் முன்னித் தெரித்தும்
இன்னணம் மாந்தரோ டுற்ற நண்பனாய்
வீட்டினி லுண்டு வீட்டினின் வளர்ந்து
கருநிறக் காக்கை பொருந்திருங் கூட்டமாய்ச்
செக்கர் வானஞ் சேர்ந்து விளங்க
வாணாட் கழிவு மன்பதை யுணர்ந்து
கழிதுய ருணர்வு மனதினி னிகழ
அந்தி மாலை வந்துதா னணுகச்
சேக்கை நாடிச் செல்லுபு செல்லுபு

பல்வகை யொலியொடு படரு மோதையும்;
நன்னாட் பார்த்துப் பொன்னை யுருக்கி
மணவினைக் கென்றே வரைந்திடு தாலியும்
அட்டியல் பதக்கம் பிலாக்கு மூக்குத்தி
பூரா னட்டியல் கீச்சிகல் லட்டியல்
கடுகுமணி கொலிசு கவுத்தோர் காதுப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளி சிமிக்கி வளையல் தோடு
பட்டணங் காப்புப் பீலிக் காப்புப்
பாத சரமொடு சங்கிலி சிலம்பு
தூங்கு கடுக்கன் நட்டுவக் காலி

அரும்பு மணிமுரு கொன்னைப் பூவும்
ஒட்டி யாண மொழிபெறு நுதலணி
அரைஞாண் கயிறோ டரைமுடி சலங்கை
சித்தி;ர வேலை செய்திடும் போது
புகழுது கைபுனை பொற்றொழி லாளர்
பட்டடை மீது சுத்திய லோங்கித்
தட்டி யடிக்குந் தகவுறு மோதையும்;
பேய்க்கோட் பட்டுப் பெருந்துய ரெய்திடு
மாந்தர் தமக்கு மாற்றது வாக
மடைபல பரப்பி உடுக்கினை யடித்து

மேலான வாசான் வாலாய மிட்ட
வன்றே வதையை வளமுற வழைத்துக்
காய்பல வெட்டிக் கழிப்புக் கழித்துப்
பேயதைப் போக்கும் பேயுரு மோதையும்;
மொய்யிருங் கூந்தல் நொய்யிடைக் கோதையர்
கொங்கை குலுங்கக் குழைநின் றசையச்
சிலம்பு வளையும் புலம்புற வார்ப்பக்
கரும்பூ ணுலக்கை கைதனிற் பற்றி
நெல்லுந் தினையு நீள்முறி யொடியலும்
அவலுந் தூளு மசைந்தசைந் திடித்துக்

கொள்ளை கொள்ளும் வள்ளைப் பாட்டை
இன்னிசை தன்னோ டியம்பிடு மோதையும்;
மரக்கலந் தனக்கு மன்னுந் துணையாய்
விண்ணை யளாவி வெளிச்சங் காட்டிடுங்
கலங்கரை விளக்க மிலங்கி நிற்குங்
கோரி மருங்கு குவவு மணன்மேற்
பலதே யத்துப் பாவைய ரீண்டிப்
புதுநா கரிகப் போக்கி லுடுத்து
விளங்கா மொழிபல விழைந்து பறைந்து
சோகி பொறுக்கித் தொகுத்துநன் காடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவா ரிக்கு மஞ்சா வோதையும்;
வைகறை யாமம் வளம்பெறு பண்களைக்
கைவல் பாணர் கற்றுக் கொடுக்க
இசையொடு கீத மியம்பு சிறார்கள்
நசையொடு யாழின் நல்கிடு மோதையும்;
நாக சுரத்தின் நலம்பெறு மோதையும்;
வேய்ங்குழல் தன்னின் விளம்புமின் கானம்,
முழவினி லெழுதரு மொய்யாமை யோதை,
நளினமோ டாலு நாடக மகளிர்
ஒண்ணுதற் கன்னியர்க் கொப்பிலா நடனம்

பழக்குபு பாடும் பண்ணமை கீதம்,
முழங்கு தண்ணுமை தழங்கு தாளம்
இன்னிசை யொலிகள் பண்ணிடு மோதையும்;
நிறையுறீஇ,
ஈழ மண்டலத் திலங்குறு தலையாய்ப்
பல்வள மல்கிய பருத்தித் துறையெனும்
பதியெழு வறியாய் பழம்பதி தன்னை
உயர்தன் னில்லாய் உறைதலு முரியன்;
ஆங்க ணன்னவற் காணநீ விழையின்
ஈங்கு நின்று நேரே சென்மதி,

வரையென வுயர்மணி மாடத் தெதிரே
புரைதீ ரடியவர் போற்றி வலம்வரும்
நல்லூர்க் கந்தன் நலந்தர வுறையும்
எல்லார் திருத்தளி ஏறொடு விளங்கும்;
இட்ட சித்திகள் எய்துறும் வண்ணம்
உற்றவன் திருவடி ஓர்ந்துதீ வணங்கி
வழிதனை யடைந்து வடபா னோக்கிக்
களிதரு மனத்தொடு காரிகாய் வழிக்கொள்;
கோதிலா மாந்தர் குடியிருப் புப்பல
தீதிலா நெறியிற் சீர்பெற வீண்டிக்

கண்ணை யிழுக்கும் காட்சி பலவொடு
நின்ற னுள்ள முன்னிக் கவர்ந்திடும்,
கோவையென் பெயர்புனை மாசிலா வூரின்
யாவையுந் திறமென வாங்குளார் நவில்வர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவழி தோறு மாம்பொழில் பூத்துக்
களிதரு தென்றற் காற்றொடு கமழ
நெறிதொறுஞ் செறிந்த நீணிழற் கீழே
கதிரவன் வெயிலாற் களைமிக வடைந்து
நலிதரு முடலச் சலிப்பினை யாற்றத்
துயிலினி தயர்ந்து மாந்தர் தூங்குவர்;

நீர்வேலி யென்பேர் நீள்பதி வழியிற்
சேரிரு புறமுந் தண்ணென் றிருக்கும்,
வாழைக் குழாங்கள் வளர்ந்தினி தோங்கி
மாழைமென் னோக்கி! வானை யளாவிடும்,
கோழிச் சேவல் பெடையொடு கூடி
வாழைப் பாத்தி கிளறிடும் போது
காதலர்ப் பிரிந்து நலிவுறு மாதர்
துனிமிக வெய்தித் துரத்துபு வாழைநற்
றடலா னெறிந்து தட்டிக் கலைக்க
நீடிய கமுகிற் சோடாய்ப் பறந்து

கூடிப் பாளையின் நாடி யிருத்தலும்
வீழ்ந்திடு பாக்குச் சாய்ந்திடு கதலிக்
குலைமே லெற்றப் பொலுபொலு வென்று
வழியதின் வீழும் பழமது பொறுக்கிப்
போவோர் வருவோர் பசிதனைத் தணிப்பர்
கடிது புத்தூர் கழிகுவை யாயின்
நொடியி லாவாங் கால்தனை நாடுவை,
அயற்பல் லூரின் அகழ்ந்துமே லெடுத்து
வண்டி யேற்றிக் கொண்டு வந்த
வள்ளிக் கிழங்கும் வளமுறு சவாரிக்

கட்டையு மலிந்து கடைகளிற் கிடக்கும்;
அச்சு வேலியென் னழகுறு பதியின்
வைச்சிடு தென்னங் கன்றுமே லோங்கி
இந்திர நாட்டே றேணி போலச்
சுந்தர வானைத் தொட்டுமெல் லசையும்,
வீட்டு வாயிலின் நீட்டிய காலுடன்
வளர்துயி லயின்று வழிமேற் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தர் காலடிப் போந்த மணத்தான்
நாகு காக்கு முருகெழு நாய்போல்
விரைவுட னெழுந்து துரிதமாய்ப் பாய்ந்து

குதிரைபோ னின்று குரைத்திடு நாய்கள்
உன்றனை நோக்கி யுறுமி யெதிர்த்திடின்
சிந்தனை கலங்கிச் சேர்பய மெய்திடேல்,
வயிரவன் தன்னை மனதினி னினைந்தவன்
செயிர்தீர் மந்திரந் தெரிவுறக் கிளப்பின்
காலுக் கிடையின் வாலைக் குழைத்துக்
களிமிக வடைந்துன் காலடி முகந்து
முறையா யடங்கி முகத்தினை நோக்கும்;
உச்சிமேற் கட்டிய உயர்முடிச் சடையினர்
நச்சிடு காவி தோய்ச்சிடு முடையினர்

பொலிவெண் ணீறு பூசிடு முடலினர்
அக்கினை யணிந்த அழகுறு கழுத்தினர்
தோளிற் றெங்குந் தூவெண் சங்கினர்
சிவநாம மோதுஞ் சீர்பெறு நாவினர்
பூண்ட துறவுப் பொற்புது குழாததர்
வழியெதிர் நின்னை வந்து பொருந்திடின்
காதலன் பதியின் நெறியதை வினாவுதி,
வல்லையென் பாலை வனத்தி னூடே
ஒல்விள மாதராய் ஓர்ந்துநி செல்வையேல்
கருதிய வாறே காதலன் பதியைப்

பெருகிய வின்பொடு பேதுறா தடைவை
இன்ன லேது நின்னை யணுகின்
மன்னன் பெயரை மறந்திடா தோது
பரிதி கண்ட பனிபோ லாங்கவை
எதிரி னின்று விலகிப் போகும்
என்றுனை வாழ்த்தி யேகிமுன் போலச்
சென்று வழியிற் சேண்புகுந் திடுவர்,
அவர்தாம்,
சாத்திரஞ் சொல்லு மொப்பில் சான்றோர்
தக்கிணை யொருபணம் வைத்துநீ கேட்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத் தாடி யள்ளித் தடவிப்
பின்னிகழ் பொருளை முன்னி யுணர்ந்து
பிறந்தநாட் டொடங்கி யிறக்குநாள் வரையு
நடக்குஞ் செய்தி தொடக்கிலா தெவையும்
இன்னிசை மொழியாற் பின்னிடா மொழியும்
மிக்க ஞானம் வெளித்த செல்வர்;
அதாஅன்று,
ஆற்றினை அடையுறீஇ ஆடவர் பெண்டிர்
கரப்புக் குத்திக் கருவண் டிறாலைப்
பற்றிப் பறியின் வைத்து விற்கும்

இடத்துக் கருகே யிருக்குமொ ராயம்
தன்னை யடையிற் பன்னிடு நெறியின்
பாதிப் பாகம் படர்ந்து கழிந்திடும்;
விரிகதிர்க் கனலி எறிகதிர் செறிந்து
மழைபெயல் மாறி வன்துயர் பெருகிப்
புல்லு மரமும் பொரிந்து கரிந்து
வற்றல் மறியும் வலியழி மாடும்
நண்பக லுருத்த நாநீர் வரண்டு
பேய்த்தேர் நீரெனப் பின்றொடர்ந் தோய்ந்து
தயங்கிக் கிடந்து மயங்கிமெய் சோர

வன்கட் பருந்தும் புன்றலை யெழாலும்
கள்ளிப் புதரின் முண்ணுணி யிருந்து
வயங்கிரை தேடி உயங்கிடு வன்சுரம்,
மணிக்கன் தோட்ட மருவி வாழும்
அம்மையன் கந்தன் ஆட்குத்தி நாகன்
என்போர்த் தலைஇய வன்றொழிந் கள்வர்
இருநெடும் பாறை மறைவி னிருந்து
வழியிற் போகும் மாந்தரை மறித்துக்
குத்தியு மடித்துங் கொல்லுங் கொடுந்தொழில்
செய்தூன் வளர்க்குஞ் செயிர்வினை யாளர்

நெருங்கிடு கொடிய னேயமில் கிடப்பு
சுற்றிய பந்தஞ் சுழற்றிடு மொளிபோல்
நள்ளிரா வேளை நீள்வெளி தோறுங்
கொள்ளிவாற் பேய்கள் குழுமி நெருப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய வாலொடு பாய்ந்து விரவி
ஆர்ப்பொடு களித்தே அலமரு கூத்து
நெஞ்சு துளக்கும் வெந்துய ரிருக்கை,
கிளைபல நெருங்கி யிருள்பட வடர்ந்து
மலைபோ லுயர்ந்து விண்ணை யளாவித்
தனிவழிச் செல்வோர் மனது கலக்கும்

புறாப் பொறுக்கி யாலென் பெருமரந்
தன்னைத் தன்வாழ் பதியெனக் கொண்ட
வல்லை முனியும் வாரிரு சங்கிலி
சலசல வென்னப் பலபல வொலியொடு
தன்பரி வாரஞ் சார்ந்து சூழப்
பாதி யாம வேளை தன்னிற்
கூகூ வென்று குமுறிக் குமுறிப்
பற்பல வுருவோ டெழுந்து திருந்தும்
இராவழி போந்திடு மாந்தரை யடித்துந்
தொல்லை செய்யும் பொல்லாத் தனியிடம்,

வல்லை யென்பேர் வன்பா லைநிலந்
தன்னைத் தனியே தாண்ட லரிதால்,
குவிந்து காய்கறி மலிந்து விற்குஞ்
சுன்னா கத்துச் சேர்முறைச் சந்தையிற்
பண்டம் பலப்பல வாங்கி வண்டியிற்
கங்குற் காலம் வந்து தோன்ற
ஏற்றி வரிசையா யிவரும் வேளை
வண்டிக் குள்ளே மகிழ்வுற விருந்து
முழங்கால் நீட்டி யேர்மூ தாட்டியர்
கணக்குப் பார்த்துக் கதைபல பேசி

வெற்றிலை யிடித்து விரும்பி யருந்திக்
கூடா ரத்திற் கட்டிடு கயிற்றைப்
பேணிக் கையாற் பிடித்துத் தூங்கப்
பின்னே நடக்கு மிளமுலை மடவார்
பெருத்திடு மேற்றம் வருத்திடும் போதங்
கிழுத்திடு மெருதுக் கின்றுணை யாக
வண்டிப் பின்னே நின்று தள்ளியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ன லிலாது முன்னிப் போகும்
பின்ன மில்லாப் பொழுதவை யோட்டுங்
காளையர் தம்மொடு காதற் கதைகள்

சிரித்துப் பேசியுஞ் செல்வோர் தம்மொடு
கூடிச் சென்று கோதாய் கடந்திடு;
மாபலா தென்னை மருவுபூஞ் சோலை
பாங்காய் நிறைந்த பல்லூர் வழிக்கண்
உள்ளங் கவரும் வனப்பொடு திகழ்ந்து
மக்கள் நிறைந்து வளம்பல பெருகி
மாவும் புள்ளும் மாண்பொடு களித்துச்
சீர்பெறு முறையுளாய்ச் செறிந்து விளங்கும்;
மரகதப் படலம் போல நெருங்கிப்
புகையிலைத் தோட்டந் தகவோடி லங்கும்;

மந்திகை யென்பேர் மாபதி யடையக்
கத்தரி யடர்ந்து காய்த்திடு வளமுடைத்
தோட்டத் துள்ளே திடமுற நின்று
பூட்டிய வில்லுப் பிடித்த கையினர்
வெள்ளைச் சட்டை மேலே யணிந்து
தலையிற் றொப்பி பொலியப் போட்டுத்
துள்ளு மீசை தோன்று முகத்தின்
நெரித்த புருவத் துருத்த கோபக்
கனலெழு கண்ணிற் குறித்த பார்வையர்
மாக்களை வெருட்டு மரபுடை வீரர்

தம்மைக் கண்டு தடுதடுப் புற்று
நெஞ்சு நடுங்கி நீபய மெய்தேல்,
அவரோ,
கத்தரித் தோட்டங் காத்திடு முறையினர்
வெருளி யென்னும் பெருமை யாளர்,
அன்னவர் விட்டு நண்ணுதால் நின்வழி
பின்னடை யாது பெயர்ந்து போகதில்;
பெற்றிடு வழியைப் பற்றியே செல்லின்
சற்றுத் தூரஞ் சார்வதன் முன்னே
மருவு வலத்திற் தெருவொன்று தோன்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கவ் வழியே தொடர்ந்து படரின்
வல்லி புரத்தே எல்லதி னடக்குஞ்
சப்பற விழாவைத் தப்பற வடையத்
தெளிந்த கள்ளை வலிந்து பருக்கி
வெறிமிக் கேறிய காளை யெருத்தைச்
சோடி சேர்த்துச் சோடினை செய்து
பூட்டி வண்டியின் நீட்டிக் கால்களை
ஆசன மீதின் அமர்ந்தினி திருந்து
நாணயக் கயிற்றைப் பேணி யொருவன்
பற்றவோர் கையான் மற்றக் கையதிற்

சவுக்கினை யுயர்த்திச் சடசட வென்ன
அடித்து வாலைக் கடித்துத் துரத்த
வண்டிக் குள்ளே வளமா யிருந்தோர்
சீழ்க்கை யடித்துச் சேர்ந்துட னுரப்ப
நுகத்துக் கடைஇய கிட்டி பிடித்துத்
திண்டிற லொருவன் வண்டிதன் முன்னே
உடம்பு வேர்வை வடிந்து சிந்தக்
களைத்துக் களைத்துக் கடிதினி னோடி
விரைந்துமுன் னோடும் வேறொரு வண்டியை
முந்தி விலத்த முயன்று முயன்று

சவாரி வரிசை சரிந்து சரிந்து
வழியிற் செல்வோர் வருவோர் தம்மை
ஏறியு நெரித்து மின்னல் செய்திடும்;
அதனான்,
அவ்வழி தன்னை அரிவைநீ நினையேல்;
காடு தோறுந் தேடுபு சென்று
காஅய்ந்த விறகு தேர்ந் தெடுத்து
வெட்டிய கட்டுத் தலைமே லேற்றி
நீண்ட வழியைத் தாண்டிக் காலான்
வருபெருங் கூட்ட நகையிளம் பெண்டிர்

கந்தை யுடையினர்
குறுக்குக் கட்டினர்
சிந்திடு வேர்வையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்த நடையினர்
வறுமையிற் செம்மை அமைந்த வாழ்வினர்
கானம் பாடி யடைதுயர் கழிக்கும்
வானம் பாடிப் புள்ளது போல
வழிநடைத் துயரும் வறுமைத் துன்பும்
தூக்கிய சுமையாற் தாக்கிய களையும்
இன்னிசை தன்னா னீக்கு மியல்பினர்

ஒன்று சேர்ந்து சிந்துகள் பாடிச்
சந்தை நோக்கிச் சென்றிடு காலை
ஆங்கவர் தம்மைப் பின்னே தொடர்ந்து
பெருமகிழ் வோடு பேதாய் சென்மோ;
அறவோர் மடமு மாதுலர்ப் பள்ளியும்
அன்ன சாலைபு மந்தணர் வீடும்
துறவோ ரிருப்புந் தேவர் கோட்டமும்
மருத்துவ ரிருக்கையும் வணிக ரிருக்கையும்
நாடக மகளிர் நீடுய ரில்லமும்
கைபுனை சிற்பன் கருதிச் சமைத்த

வனப்புறு பாவை மல்கி விளங்குந்
தோரண வாயிலொடு தோன்றக் காண்பை;
அறவழி நின்று பொருள்மிகப் பெருக்கி
இம்மையி னின்பமு மறுமையின் வீடும்
பெறும்பே றாளர் பேர்பெறு மாந்தர்
அறமிக வளர்க்கு மாறு பார்த்துப்
பெருங்கொடை கொடுக்கும் பெற்றி யாளர்
புலவோர் புரவலர் இரவோர் புகலிடம்
தமக்கென வையாது பிறர்க்குக் கொடுக்கும்
குபேரன் போலு மாபெருஞ் செல்வர்

விரும்பி யுறையு முயர்மணி மாடந்
தெருவு தோறும் வகைவகை விளங்கும்;
தண்ணீர்ப் பந்தருந் தருமக் கிணறும்
ஆதீண்டு குற்றியு மரும்பூஞ் சோலையும்
ஆங்கு மன்னி அழகொடு நெருங்கும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடை போகு மக்களு மாக்களும்
வெயிலான் வாடித் துயரடை யாது
முகடு பாய்ச்சி மூடி யுயர்த்தித்
திண்ணை வகுத்துக் கட்டிய நேர்தெரு
மூடி மடங்கள் வரிசையாய்த் திகழும்;

அத்திருப் பதியை யடைந்தபி னவனை
வினாபின் பலப்பலர் மிகுபொருள் பெறீஇ
அன்னோற் பழிச்சி அகல்வோர் நிற்கண்
டவனில் கூறுவ ராங்கணீ செல்லின்,
யவனத் தச்சன் யாஅத் தமைத்த
யாளிக ளிருபுற நீணிலை யேந்த
அழகுறப் புனைந்த தோரணத் தூடே
உள்ளக் களிப்பொடு மெல்லநீ நடப்பின்
நிறைகுட மேந்திய நிரையிள மகளிர்
புனிற்றா வொன்று நண்ணித் தொடர

அசைந்த நடையொடு பெயர்ந்து போகுவர்,
கழனிக் குருவி கலகல வென்று
சேமநல் லுரைபோற் சேர்ந்து கூவிடும்,
நிறம்பல தீட்டிய பசும்பொற் சேலை
விரும்பி யணிந்த மடவார் குழாத்தின்
ஒண்பூஞ் சோலையி னுலவிடு தென்றல்
உந்தி யசைக்குந் தூங்கு தாவணி
விரிந்து சுழலு மழகு போன்று
வண்ணாத்தி யென்னும் வனப்புறு பூச்சி
மேல்பா வாடை விரித்தது போலப்

படலமாய் நின்றன் றலைக்கு மேலே
சிறகினை யடித்துச் சேர்ந்து நெருங்கிப்
பறந்து பறந்து சுழன்று திரியும்,
காலடிக் கீழே கனமா மணிகள்
கும்பல் கும்பலாய்ப் பரந்து கிடக்கும்,
அலர்ந்த முகத்துட னரிவையர் வந்து
நின்றனை வாழ்த்தி முன்றிலை முன்னி
நாடும் போது நந்தன வனத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாறிணர்க் கொம்பர் நலமுற வசைந்து
மலர்க்கை நீட்டி வாவென வழைக்கும்,

தவளை மத்தளந் தாவி யடிக்கச்
சில்வண்டு தாளம் சீரொடு பிடிக்க
மாமரத் திருந்து மாங்குயிற் கூட்டம்
இன்னிசைக் கீதம் இயைபுட னியம்பப்
பன்னிற மாமயில் விண்ணினை நோக்கிக்
கூரைமே னின்று சிறைவிரித் தாடும்,
ஆற்றினி லெழுதருங் காற்றினி தசைந்து
சுற்றுபூஞ் சோலைக் கொத்தினைக் கொஞ்சிக்
களியொ டுலாவி யளியொடு கூடி
இன்புற வீசுந் தண்பனங் காவின்

நடுவி லமைத்துநல் லிலையான் வேய்ந்து
பண்புறப் புனைந்து பல்வளந் திகழும்
கவினுறு மாளிகைத் தவிசின் மீமிசை
யாழ்மிசைக் கீதம் இயம்புவ ரொருபால்
பண்ணொடு பதிகம் பாடுவ ரொருபால்
வேய்ங்குழ லின்னிசை விளம்புவ ரொருபால்
இன்னிய மொலித்திட இராகம் பாடிப்
பல்வகைச் சிந்து பாடுவ ரொருபால்
தண்டமிழ் வளர்க்குந் தகவுறு சான்றோர்
சீருறு கலைகள் சிறப்புற விரித்து


விளக்கக் கேட்டிடு மாந்த ரொருபாற்
கூடி நெருங்கிடுங் குழாத்து நாப்பண்
வேயமர் தோழி! வீற்றினி திருப்பன்
நின்றன் காதலன் நேரிழாய்! காண்குவை;
அவணீ யடைஇ எண்ணிய வண்ணம்
இழந்தவுன் னுள்ளந் தன்னைப் பெறுவை;
அதாஅன்று,
காத றந்துநின் கருத்து முற்றுறக்
களிமிக் கெய்திப் பெருகிய வன்பொடு
பேணிக் காத்துப் புகழ்ந்துநிற் போற்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே நீயாய் நீயே தானாய்
ஒருசம னாக உவந்து கருதுவன்;
பாணர் நாளவை பாவலர் வெறுக்கை
கொடைப்பெரு வள்ளல் கோதில் சான்றோன்
கலையருஞ் செல்வங் காத்திடு முதல்வன்
மடியா வுள்ள மாப்பெருங் குரிசில்
தன்னுயிர் போல மன்னுயிர் கருதும்
தகைசால் தோன்றல் தண்ணளி யிருக்கை
வேற்றுமை யென்னும் பேதமை யிலாது
யாவரு மொன்றே யாவருங் கேளிர்

என்றே யெண்ணு மேருடைத் தகவோன்
பழையன போற்றிப் புதியன வமைக்கும்
பகுத்தறி வாளன் பாருடைத் தலைவன்
தீதில் நெஞ்சந் தூய்மைக் கரணம்
தலையாய மாந்தர்ச் சமனாய் விளங்கி
மாந்தர் பசிப்பிணி மாறா தாற்று
மென்று புலவோர் எடுத்தெடுத் தோதிப்
பாடு கரும்பனங் காடுகிழ வோனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org